


விலை ரூபா 40
பக்கங்கள் - 12

# ஒருவன்

ஆண்டு: 01 இதழ் : 47 குரோதி வருடம்
கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (13.12.2024)




## வடக்கில் நிலவும் மர்ம காய்ச்சல்

# யாழில் உயிரிழந்த ஏழுபேரில் இருவருக்கே எலிக்காய்ச்சல்

## உறுதிப்படுத்தியது சுகாதார அமைச்சு

**எஸ்.டொரின்**

வடமாகாணத்தில் பரவிவரும் மர்மக் காய்ச்சலால் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களின் இரத்தமாதிரிப் பரிசோதனைகளின் அடிப்படையில் இருவருக்கு மாத்திரமே எலிக்காய்ச்சல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று (12) தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 6 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவரும் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தில் மாத்திரம் இதுவரை 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருவர் மாத்திரமே எலிக்காய்ச்சலில் உயிரிழந்துள்ள நிலையில், ஏனையவர்கள் தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தேசிய தொற்று நோயியல் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் துஷானி தம்பரேரா தெரிவித்தார்.

நேற்று (12) கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், உயிரிழந்த 7 நோயாளர்களின் மாதிரிகள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலையின் ஆய்வு கூடத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதில் சில நோயாளிகளின் மாதிரிகளில் எலிக்காய்ச்சல் (லெப்டோஸ்பிரோசிஸ்) மாதிரிகள் கண்டறியப்பட்டுள்ளன.

02 →

## தேசிய பட்டியலை பூர்த்தி செய்தது ஐ.ம. கூட்டணி

### இடைக்கால தடைக்கு மத்தியிலும் அறிவிப்பு



**எஸ். நிஷாந்தன்**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் நிஸாம் காரியப்பர், சுஜீவ சேனசிங்க, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.ஐ. முத்து மொஹம்மட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் பொதுச் செயலாளரால் இந்த பெயர்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதே நேரம்,ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் இறுதி செய்யப்படுவதைத் தடுக்கும் வகையிலான இடைக்கால தடையுத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று காலை பிறப்பித்திருந்தது.

02 →

## அதானி நிறுவனத்தின் செயல்பாடு இலங்கையில் அதி முக்கியம்



**சுப்ரமணியம் நிஷாந்தன்**

அதானி நிறுவனம் கொழும்பு துறைமுகத்தில் தமது செயல்பாடுகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமாகும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று வியாழக்கிழமை கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு ஊடகங்களிடம் கூறினார்.

இதன்போது அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், ”2025ஆம் ஆண்டின் நடுபகுதியாகும் போது கொழும்பு துறைமுகத்தில் மேலும் இரண்டு புதிய முனையங்கள் தமது செயல்பாடுகளை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கிறோம். அவற்றின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பை பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கிறோம்.

02 →




இன்று கார்த்திகை திருநாளாகும். இதனை முன்னிட்டு இந்தியாவின் கோயிலொன்றில் பக்தர்கள் அகல் விளக்கேற்றி வழிபடுவதை படத்தில் காணலாம்

## அசாத்சாலியின் கைது; சட்டவிரோதம் உயர்நீதிமன்றம் தீர்ப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 2021ஆம் ஆண்டு மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை சட்டவிரோதமானது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன் பிரதிவாதிகளுக்கு நட்டஈடாக 75,000 ரூபாவை

02 →

## சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்: குற்றவாளிக்கு 30 ஆண்டு சிறை

**எஸ்.கீதபொன்கலன்,**
**எம்.என்.எம். புஹாரி**


15 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு 30 வருட சிறைத்தண்டனையும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 3 இலட்சம் ஷரூபா நட்டஈடும் வழங்குமாறு திருகோணமலை மேல் நீதிமன்றம் புதன்கிழமையன்று(11) தீர்ப்பு வழங்கியுள்ளது.

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 வயதான சிறுமி ஒருவரை பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபருக்கு எதிராக

02 →

## தொடரும் சீரற்ற வானிலை

### வங்கக்கடலில் மெதுவாக நகரும் தாழமுக்கம்



**பாலகணேஷ் டிலுக்ஷா**

தென்மேற்கு வங்கக்கடலில் நீடிக்கும் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை வடமேற்கு திசையில் மேற்கு நோக்கி மெதுவாக நகர்ந்து இலங்கையின் வடக்கு கடற்கரையை அண்மித்து தமிழக கடற்கரையை அடையும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல்

02 →

## நிதிக் கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் அறிவுறுத்தல்

நாட்டின் நிதிக் கட்டமைப்பை பலப்படுத்தி, செயல்திறன் மிக்கதாக மாற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் விடுத்தார்.

நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு அறிவுறுத்தினார்.

02 →



## இலங்கைக்கு 55,000 மெ.தொ உரம் நன்கொடை வழங்கிய ரஷ்யா



**பாலகணேஷ் டிலுக்ஷா**

இலங்கையின் விவசாயத் துறையை வலுப்படுத்தும் நோக்கில் ரஷ்யாவால் இலங்கைக்கு 55,000 மெற்றிக் தொன் பொட்டாசியம் குளோரைட் உரம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் வைத்து ரஷ்ய தூதுவர் லெவன் ட்ஜகார்யனால் விவசாய அமைச்சர் கே.டி.லால்காந்தவிடம் இந்த உரம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

ரஷ்யாவின் உரல்கெம் குழுமத்தால் உற்பத்தி செய்யப்படும் இந்த உரமானது, இலங்கையின் விவசாயத் துறைக்கு ஆதரவளித்து உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலை விபத்தில் இரு சகோதரிகள் பலி



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கார் ஒன்று லொறியுடன் மோதியதில் 10 மற்றும் 12 வயதுடைய இரு சிறுமிகள் உயிரிழந்துள்ளதாக பின்னதுவ நிர்வாக நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் ஏற்பட்ட இந்த விபத்தில் மாத்தறை நுபே பகுதியைச்

02 →

## வழக்கு விசாரணைக்கு வந்த சிறைக் கைதி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம் சிறைச் சாலையிலிருந்து யாழ். நீதிமன்றத்துக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் நேற்று (12) அழைத்துவரப்பட்ட சிறைக் கைதியொருவர் மயங்கி விழுந்து உயிரிழந்தார். யாழ்ப்பாணம் நீதிமன்ற வளா கத்தில் வழக்கொன்றுக்காக அழைத்துவரப்பட்டவரே இவ்வாறு உயிரிழந்தார்.

02 →

# இறக்குமதி அரிசிக்கான சுங்க வரி 15 ரூபாவால் குறைக்கப்பட வேண்டும்

## இறக்குமதியாளர்கள் சங்கம் கோரிக்கை

**கனுஷியா புஷ்பகுமார்**



இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான சுங்க வரி 15 ரூபாவினால் குறைக்கப்பட்டால், சில்லறை விற்பனைக்காக அரிசியை சிறந்ததொரு விலைக்கு வழங்க முடியும் என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ நாட்டு அரிசியை ஏறக்குறைய 220 ரூபாவிற்கு வழங்க முடியும் என இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

அந்த அரிசி மொத்த விற்பனை சந்தைக்கு வரும்போது, கிலோவுக்கு 8 முதல் 10 வீதம் வரை செலவிட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் 440 மெட்றிக் டொன் அரிசியை தனியார் இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்துள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 2ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அரிசியை இறக்குமதி செய்ய தனியாருக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியது.

அதன்படி, இம்மாதம் 20ம் திகதி வரையில் இந்த அனுமதி கிடைத்துள்ளது .

# இலங்கை விமானப் படைக்கு விமானத்தை அன்பளிப்புச் செய்த அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலிய விமானபடைக்குச் சொந்தமான Beechcraft king Air 350 விமானத்தை இலங்கை விமானபடைக்கு அவுஸ்திரேலிய அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலிய எல்லைப்படை மற்றும் இலங்கை கரையோரப் பாதுகாப்பு படை திணைக்களம் இணைந்து வெளியிட்ட கூட்டு ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் கூறப்பட்டுள்ளது.

நேற்று வியாழக்கிழமை (12) கொழும்பில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டதன் மூலம் கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் அவுஸ்திரேலியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையிலான அர்ப்பணிப்பு புதியதோர் மைல்கல்லை எட்டியுள்ளதாக குறித்த ஊடக அறிவிப்பு தெரிவிக்கின்றது.

மேலும் குறித்த ஊடக அறிவிப்பில்,

"கடந்த ஒக்ரோபர் மாதத்தின் இறுதிப் பகுதியில் இலங்கை விமானப்படையிடம் சட்டபூர்வமாக கையளிக்கப்பட்ட இந்த நவீன இரட்டை எஞ்சின் (Turboprop) விமானமானது, ஆட்கடத்தல் உட்பட நாடு கடந்த குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கு இலங்கையின் வான்வழி மற்றும் கடல்சார் கண்காணிப்புத் திறனை பாரிய அளவில் மேம்படுத்தும்.

இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பை பேணுவதற்கு இரு நாடுகளும் மேற்கொண்டு வரும் பரஸ்பர முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், அவுஸ்திரேலியாவின் இதுபோன்ற அன்பளிப்புகள் அமைவதாக, இலங்கை விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச தெரிவித்தார்." எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருக்கார்த்திகை: வீட்டில் ஏற்றவேண்டிய 27 வகை தீபங்கள்

திருக்கார்த்திகைத் திருநாளின் சிறப்பம்சம் தீபவழிபாடு. வீட்டில் மங்காத செல்வத்தையும், மங்கலத்தையும் தரவல்லது தீப வழிபாடு. தீப ஒளி நிறைந்திருக்கும் வீட்டில் தீய சக்திகள் யாவும் விலகி, வீட்டில் லட்சுமி கடாட்சம் நீங்காது நிறைந்திருக்கும்.

சுபம், ஆரோக்கியம், நன்மை, தனசேர்த்தி, நல்லபுத்தி ஆகியவை பெருகிட, திருக்கார்த்திகை நாளில் தீபம் ஏற்றி வழிபடவேண்டும் என்று வழிகாட்டுகின்றன ஞான நூல்கள். அவ்வகையில் தீபங்களின் வகைகள், மகிமைகள், வீட்டில் எத்தனை வகையான தீபங்களை ஏற்றினால் நன்மை பயக்கும்.

தீபங்கள் ஏற்றி வழிபடுவது ஏன்?

எங்கு நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை ஓர் உருவில் அடக்காமல், ஒளி வடிவில் வழிபட்டுப் பலன் பெற தீபங்கள் உதவும். பரஞ்ஜோதியாய் திகழும் பரம்பொருளுடன் ஜீவ ஜோதியாகிய ஆன்மாக்கள் இரண்டறக் கலக்க வேண்டும். இதுவே, தீபங்கள் உணர்த்தும் வழிபாட்டுத் தத்துவம்.

'தீபத்தின் ஒளி எப்படி வித்தியாசம் பார்க்காமல் எல்லா உயிர்களின் மீதும் படுகிறதோ, அப்படியே நம் மனதிலிருந்தும் அன்பு ஒரு தீபமாக, எல்லோரையும் தழுவுவதாகப் பிரகாசிக்க வேண்டும். இப்படிப்பட்ட அகவொளியோடு புற ஒளியாகிய தீபத்தை ஏற்றி வைத்து வழிபட வேண்டும்." என்பது காஞ்சி மகா பெரியவர் வாக்கு.

கார்த்திகை நட்சத்திரத்துடன் முழுமதி சேரும் காலம் எங்கும் பனியும் குளிருமாக இருக்கும். இப்படி முழுமதியும் கார்த்திகையும் இணையும் மாதம் கார்த்திகை மாதம் ஆகும். இப்படியான குளிர் மிகுந்த கார்த்திகையின் முழுமதி நாளில், சிவபெருமான் சோதிப் பிழம்பாகக் காட்சியளிக்கிறார். அவர், அக்னி மண்டலத்தின் நடுவில் உமையொரு பாகனாக திருநடனம் புரிகிறார். அதுவே கார்த்திகை தீபத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

சரி, இந்தத் திருநாளில் ஆலயங்கள்தோறும், வீடுகள்தோறும் ஏராளமான விளக்குகளை ஏற்றுகின்றனர். அது ஏன்? விண்ணில் விளங்கும் நட்சத்திரக் கூட்டங்களை மண்ணில் ஒளிர்வதாகக் காட்டுவதே திருக்கார்த்திகை தீபத்திருநாள். அதையொட்டியே, அன்று எண்ணற்ற தீப விளக்குகள் ஏற்றப்படுகின்றன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### நிதிக் கட்டமைப்பை ...

நாட்டின் நிதி நிலைமையை ஸ்திரப்படுத்த, சுயாதீன நிறுவனம் என்ற வகையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும், அதற்கான ஒத்துழைப்பு மற்றும் வசதிகளை அரசாங்கம் வழங்கும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். இலங்கையின் நிதிச் செயற்பாடுகளை செயல்திறன் மிக்கதாக்குவதற்கு நல்லதொரு பொறிமுறையை உருவாக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

பொருளாதாரம் மற்றும் நிதிக் கட்டமைப்புக்களின் முழுமையான முன்னேற்றங்களை நெருக்கமாக ஆராய்ந்த பின்னர், மத்திய வங்கியினால் நிதி ஸ்திரமாக்கல் மற்றும் நிதிக் கட்டமைப்பின் ஈடுகொடுக்கும் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதன்படி, நிதிக் கட்டமைப்பில் தற்போதுள்ள பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளை (Macroprudential policy) அமுல்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

பொருளாதாரம் நிலைப்படுத்தப்பட்டவுடன் சொத்துக்களின் தரநிலையில் பாதுகாப்பான முன்னேற்றம் மற்றும் முன்மதியின் அடிப்படையில் அவதானத்தை முகாமைத்துவம் செய்துகொண்டு மூலதனத்தை கட்டியெழுப்புவதன் ஊடாக நிதி கட்டமைப்பில் சாதகமான செயல்திறன் எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார,நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்சன சூரியப்பெரும,நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டனர்.

### சிறுமி பாலியல்...

திருகோணமலை மேல் நீதிமன்றில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. குறித்த வழக்கானது விசாரணைகள் முடிவுற்று புதனன்று(11) தீர்ப்பு வழங்கப்பட்டபோதே மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.எம். அப்துல்லா இத்தீர்ப்பை வழங்கினார்.

இவ் வழக்கில பாதிக்கப்பட்ட சிறுமியின் சார்பில் அரச சட்டத்தரணி நசிகேசன் முன்னிலையாகியிருந்தார்.

சம்பூர் பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய நபரினால் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதியில் இருந்து மே மாதம் வரையான காலப்பகுதியில் குறித்த சிறுமி மூன்று முறை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்ததாகவும் விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.அந்தவகையில் ஒருமுறைக்காக 10 வருடங்கள் சிறைத்தண்டனை என்ற அடிப்படையில் 30 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதுடன் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நட்டஈடாக ஒரு குற்றத்திற்காக தலா ஒரு இலட்சம் வீதம் மூன்று இலட்சம் ரூபாய் வழங்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதுபோன்ற தீர்ப்புகள் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிராக இடம்பெறும் பாலியல் குற்றங்களை குறைப்பதற்கு உதவும். இதுபோன்ற கடுமையான தண்டனையை திருகோணமலை நீதிமன்றில்,மிக நீண்ட காலத்திற்கு பின்னர்,புதிய அரசாங்கத்தின் காலத்தில் பார்க்கக்கூடியதாக உள்ளது. எனவே தண்டனைகள் அதிகரிக்கின்ற போதுதான் குற்றங்கள் குறையும் என்பதால் இதுபோன்ற தீர்ப்புகளை வரவேற்பதாகவும் சமூக நலன் விரும்பிகள் இத் தீர்ப்பு தொடர்பில் கருத்து தெரிவித்தனர்.

### தேசிய பட்டியலை பூர்த்தி...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தேசியப்பட்டியல் வழங்குவது தொடர்பான தங்களது கட்சியுடனான உடன்பாட்டை ஐக்கிய மக்கள் கூட்டணி நிறைவேற்றவேண்டுமெனவும், அதுவரை இடைக்காலத் தடையை விதிக்குமாறும் முஸ்லிம் காங்கிரஸ் தனது மனுவில் கேட்டிருந்தது.

அதன்படி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிசாம் காரியப்பரின் பெயர் இல்லாமல் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெற்றிடங்களுக்கான பெயர்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதைத் தடுத்தே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

இடைக்காலத் தடை இருக்கின்ற நிலையிலேயே, தேசியப் பட்டியல் பூர்த்தி செய்து அறிவிக்கப்பட்டு இருந்தாலும், இடைக்காலத் தடையை நீக்குவதற்கான மனு ஒன்றை இன்று தாக்கல் செய்வோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஒருவன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

### அதிவேக நெடுஞ்சாலை....

சேர்ந்த செனுதி தம்சரா (10 வயது) , சதீஷா (12 வயது) ஆகிய சிறுமிகளே உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்த சிறுமிகளின் தந்தை மற்றும் தாய் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த அவர்களின் கார் அதே திசையில் பயணித்த லொறியின் பின்புறம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

### வழக்கு விசாரணைக்கு...

நாவற்குழி ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த 40 வயதான இரத்தினசிங்கம் சந்திரகுமார் என்பவரே உயிரிழந்தவராவார். இக் கைதி பல்வேறு குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் தொடர்புபட்டவர் என பொலிஸார் மற்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் சடலம் யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டது.பிரேத பரிசோதனைக்குப் பின்னர் உயிரிழப்புக்கான காரணம் தெரியவரும் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

### அசாத்சாலியின் கைது;...

வழங்கவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

### தொடரும் சீரற்ற...

திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் காரணமாக வடக்கு, வடமத்திய, கிழக்கு, மேல் மற்றும் வட மேல் மாகாணங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் எனவும் வடமாகாணத்தில் சில இடங்களில் 75 மில்ல மீற்றர் வரை பலத்த மழை வீழ்ச்சி பதிவாக கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நீடிப்பதால் புத்தளத்திலிருந்து மன்னார், காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான ஆழ்கடல் மற்றும் ஆழமற்ற கடற்பகுதிகளில் மீன்பிடி மற்றும் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை வீழ்ச்சி பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பில் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும்காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கடற்பரப்பு கொந்தளிப்பாககாணப்படும் எனவும் புத்தளத்தில் இருந்து கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகள் ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் அவ்வப்போது சிறிதளவு கொந்தளிப்புடன் காணப்படுவதுடன், இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் அக்கடற்பரப்புகளில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும், பின்னர் அந்த கடற்பரப்புகள் தற்காலிகமாக மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்கள் குறித்து அவதானம் செலுத்துமாறும், ஏதேனும் அனர்த்த நிலைமைகள் பதிவாகுமாயின், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர இலக்கமான 117 என்ற இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்குமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, பெங்கல் புயல் தாக்குதலை தொடர்ந்து, காற்றழுத்த தாழ்வு பகுதியால், தமிழகத்தின் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகின்றது.

எவ்வாறாயினும் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி புயலாக வலுப்பெற வாய்ப்பில்லை என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### அதானி நிறுவனத்தின்...

அதானி நிறுவனத்தின் முதலீடு தொடர்பில் இலங்கையில் உள்ள பிரச்சினையானது மன்னார் காற்றாலைத்திட்டமாகும்.அதுதொடர்பில்அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளோம். ஜனாதிபதி இதுகுறித்து தெளிவுபடுத்தியுள்ளதுடன், நீதிமன்றத்துக்கும் அறிக்கையிட்டுள்ளோம். இத்திட்டம் இலங்கைக்கு பாதகமானது.

அதானி குழுமம் அபிவிருத்தி செய்யும் கொழும்பு மேற்கு முனையம் தொடர்பிலான விவகாரத்தில் அவர்களுக்கு நிதியை அளிக்கும் அமெரிக்க நிறுவனத்துடனான ஒப்பந்தத்தில் இருந்து விலகியுள்ளனர். அவர்களது நிதியில் இதனை செய்வதாக கூறியுள்ளனர். அதனால் அதானி நிறுவனம் தமது செயல்பாடுகளை ஆரம்பிப்பது மிகவும் முக்கியமாகும்.

கொழும்பு துறைமுகத்தின் பெரும்பான்மையான பகுதி துறைமுக அதிகார சபைக்கு உட்பட்டதுதான். ஆனால், வேறு சில நிறுவனங்களும் தற்போது பணிபுரிகின்றன. துறைமுகத்தில் எதனையும் நாம் தனியாருக்கு விற்பனை செய்யவில்லை. ஆனால், ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட பல விடயங்கள் உள்ளன. அதனால் விற்பனை செய்யப்பட்ட விடயங்களின் செயற்றிறனை அதிகரிக்க வேண்டும். அதற்குத் தேவையான உதவிகளை செய்ய முடியும் என்பதுடன், இதன் ஊடாக நாட்டுக்கு பெற்றுக்கொள்ள கூடிய அனைத்து நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

சி.ஐ.சி.டி, டிபிள்யு.சி.டி ஆகிய நிறுவனங்களின் 85 வீதமான பங்குகள் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமானவை. 15 வீதமானவைதான் துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமானவை. என்றாலும், துறைமுகத்தின் முழு நிலப்பரப்பும் துறைமுக அதிகார சபைக்கே சொந்தமாகும்." என்றார்.

### யாழில் உயிரிழந்த...

தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த நோய் தாக்கம் உடையவர்களுக்கு இன்புளுவன்சா அல்லது வேறு நோய்கள் உள்ளதா என ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையில் எலிக்காய்ச்சல் நோய் தொடர்பான ஆய்வுகள் துரிதமாக நடத்தப்பட்டு வருவதாகவும் மருத்துவ நிபுணர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவிக்கையில்,

இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராக காணப்படுகின்ற நிலையில், இறந்தவர்கள் அனைவரின் உயிரிழப்புகளும் சுவாசத்தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமைக்கு பின்னர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது.

மேற்படி காய்ச்சல் நிலைமையை நாம் எலிக்காய்ச்சலாக கருதி, அதற்குரிய சுகாதார தடுப்பு நடவடிக்கைகளையும் சிகிச்சைகளையும் முன்னெடுத்துள்ளோம்.

இக் காய்ச்சல் பரவி வருகின்ற பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு நாள் காய்ச்சலாக இருந்தாலும் பொதுமக்களை உடனடியாக அருகில் உள்ள அரசாங்க வைத்தியசாலைக்கு செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்கள் இருவர் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இருவர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஒருவர் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் உயிரிழந்துள்ளனர்.

மேலும், யாழ். போதனா வைத்தியசாலையில் இறந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர். யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் 12 நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் 21 நோயாளர்களுமாக மொத்தமாக இதுவரை 34 நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சலுடன் இருபது நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ஊழல், மோசடியை தடுக்கும் அரசின் வேலைத் திட்டத்துக்கு கனடா ஆதரவு

ஊழல் மோசடியை மட்டுப்படுத்த தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் (Eric Walsh)தெரிவித்தார். ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனடிய உயர்ஸ்தானிகர் எரிக் வொல்ஷ் (Eric Walsh) ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (12) நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

ஊழல் மற்றும் மோசடியை ஒழிப்பது தொடர்பில் கனடா அரசாங்கத்தின் அனுபவங்களை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையின் பொருளாதார பின்னடைவுக்கு முன்பு காணப்பட்ட அரசியல் கலாசாரமே காரணம் என சுட்டிக்காட்டிய கனேடிய உயர்ஸ்தானிகர், தற்போதைய அரசாங்கம் அந்த அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு பாராட்டு தெரிவித்தார். இலங்கைக்கான கனேடிய தூதரகத்தின் இரண்டாம் செயலாளர் (அரசியல்) பெட்ரிக் பிகரிங் இதன்போது கலந்துகொண்டார்.



# அரிசியை இறக்குமதி செய்வதில் நெருக்கடி

(கனூஷியா புஷ்பகுமார்)

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அறிவிடப்படும் வரியை குறைக்குமாறு அல்லது அரிசி விலையை அதிகரிக்குமாறு அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் விடுத்த கோரிக்கையை வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நிராகரித்தமையினால் அரிசி இறக்குமதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்துக்கும் இடையில் வர்த்தக அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இந்த இரண்டு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்ட நிலையில், அதனை அமைச்சர் நிராகரித்துள்ளார்.

இந்த நிலையில் அரிசியை இறக்குமதி செய்ய முடியாது என இறக்குமதியாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தின் உறுப்பினர் நிஹால் செனவிரத்ன கருத்து தெரிவிக்கையில், அரிசி இறக்குமதி வரியை குறைக்கும் அல்லது அரிசியின் விலையை அதிகரிக்கும் யோசனையை அமைச்சர் வசந்த சமரசிங்க நிராகரித்ததாக தெரிவித்தார்.

இறக்குமதியாளர்கள் அரிசியை ஏற்கனவே பதிவு செய்து இலங்கைக்கு கொண்டு வந்துள்ளதாக நிஹால் செனவிரத்ன மேலும் குறிப்பிட்டார்.

# விவசாயிகளுக்கு ரூ. 1 இலட்சம் இழப்பீடு

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட பயிர் சேதங்களுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபா பூரண இழப்பீடு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என விவசாய மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தெரிவிக்கையில், விவசாய நிலத்தை தயார் செய்வதற்காக பிரதேசத்தில் உள்ள அரச நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவதற்கு விவசாயிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களின் அளவு மற்றும் பாதிக்கப்பட்டுள்ள விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை என அனைத்தும் தற்போது மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதன்படி,சேதமடைந்த விளை நிலங்களுக்கு விவசாயிகளுக்கு ஹெக்டேயருக்கு ஒரு இலட்சம் ரூபா முழு இழப்பீடு வழங்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது.

அரசாங்கம் என்ற வகையில் அந்த கடமையையும் பொறுப்பையும் நிச்சயமாக நிறைவேற்றுவோம். நெற்பயிர்கள் சுமார் ஒரு அடி, இரண்டு அடி, ஒன்றரை அடிக்குக் கீழ் மணல் அடுக்குகளால் நிரப்பப்பட்டுள்ளன. அதற்கு இயந்திரங்களின் உதவியை எடுக்க வேண்டும்.

அந்த பகுதிகளில் உள்ள பல்வேறு அரசு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் கீழ், அந்த விளைநிலங்களைச் சீரமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளோம். தற்போதுள்ள சுற்றறிக்கைகளைப் பற்றிச் சிந்திக்காமல் புரிந்துணர்வுடன் செயற்படுமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் கார்த்திகை மாதம் 28ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** இன்றை நாள் உங்களின் பொறுமையை சிறிது சோதிக்கும் நாளாக அமையும்.

**ரிஷபம்** மகிழ்ச்சியாக இருப்பதற்கு சிறிது அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.

**மிதுனம்** உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

**கடகம்** இன்றைய நாளை நீங்கள் நல்ல முறையில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள்.

**சிம்மம்** எதிர்பார்த்ததை விடவும் கூடுதலான பணவரவு இருக்கும்.

**கன்னி** இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

**துலாம்** இன்று ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு அமைதியையும் மன நிறைவையும் பெற்றுத் தரும்.

**விருச்சிகம்** இன்று நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

**தனுசு** இன்று நீங்கள் நம்பிக்கை மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

**மகரம்** பொருளாதார நிலைமை திருப்திகரமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**கும்பம்** இன்று உங்கள் திருமண வாழ்க்கை இனிமையானதாக உணர்வீர்கள்.

**மீனம்** இன்று முற்போக்கான நாளாக அமைய நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** திரையோதசி திதி மாலை 06:35 PM அதன் பிறகு சதுர்த்தசி திதி.
**நட்சத்திரம்:** பரணி நட்சத்திரம் காலை 06:50 AM அதன் பிறகு கார்த்திகை நட்சத்திரம்.
**யோகம்:** சித்த மரணம் யோகம்.
**சந்திராஷ்டமம் நட்சத்திரம்:** அஸ்தம்.
**சூலம்:** மேற்கு
**இராகு காலம்:** காலை 10:30 AM முதல் 12:00 PM வரை,
**குளிகை:** காலை 07:30 AM முதல் 09:00 AM வரை,
**எமகண்டம்:** மதியம் 03:00 PM முதல் 07:30 PM வரை,

# வெள்ளப்பாதிப்பு: மீள் நிர்மாண அறிக்கைகளை கோருகிறது அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உட்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்ட பாதிப்புக்களை மீள்நிர்மாணம் செய்வதற்கான மதிப்பீட்டறிக்கைகளை அனர்த்த நிவாரண அமைச்சு சகல மாவட்ட அரசாங்க அதிபர்களிடமும் கோரியுள்ளது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய வெள்ளம் காரணமாக உடைக்கப்பட்ட, சேதமாக்கப்பட்ட வீதிகள், பாலங்கள், அணைக்கட்டுக்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், அரச நிறுவனங்கள், குழாய் நீர் இணைப்புக்கள், பாடசாலைகள், தனியார் வீடுகள் உள்ளிட்ட பல்வேறு சேத விபரங்களையும் பிரதேச செயலாளர்களிடம் மாவட்ட அரசாங்க அதிபர்கள் கோரியுள்ளனர்.

வெள்ளப்பாதிப்புக்களை மீள்நிர்மாணம் செய்வதற்கு வெளிநாட்டு அரசாங்கங்களும், முகவராண்மை உதவி அமைப்புக்களும் உதவ முன்வந்துள்ளதை அடுத்து 2025 ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதற்காகவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு விபரங்களை கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களிடமும் அறிக்கை கோரியுள்ளார். அண்மைய பாரிய வெள்ளம் காரணமாக வடக்கு, கிழக்கு, தென் மாகாணங்கள் மிகக் கூடியளவு பாதிப்புக்களையும், உயிரிழப்புக்களையும் எதிர்நோக்கியமை குறிப்பிடத்தக்கது.

நாடளாவிய ரீதியில் சுமார் 382,000 ஏக்கர் நெற்காணிகளும், பல அணைக்கட்டுக்களும், சுமார் 52 க்கு மேற்பட்ட வீடுகளும் பல பாரிய அணைக்கட்டுக்களும், நீர்ப்பாய்ச்சல் வாய்க்கால்களும் வெள்ளத்தினால் சேதமாகியமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர்கள் 9 பேர் விடுதலை; உயிரிழந்த கடற்படை வீரருக்கு இழப்பீடு

## மல்லாகம் நீதிமன்றம் உத்தரவு

தமிழக மீனவர்கள் 9 பேரை நேற்று முன்தினம் (11) நிபந்தனையுடன் விடுதலை செய்த மல்லாகம் நீதிமன்றம், கைது நடவடிக்கையின் போது உயிரிழந்த கடற்படை வீரருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்படையினர் கடந்த ஜூன் 25 ஆம் திகதி இலங்கை கடல் எல்லையை அத்துமீறி நுழைந்த நாகை மாவட்டம் அக்கரைப்பேட்டையைச் சேர்ந்த ஆனந்தன் என்பவருக்குச் சொந்தமான விசைப் படகை கைப்பற்றி, படகிலிருந்த 10 பேரை கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர். இந்த கைது நடவடிக்கையின் போது, இலங்கை ரோந்துப் படகிலிருந்த இலங்கை கடற்படை வீரர் ரத்நாயக்க, கைப்பற்றப்பட்ட மீனவர்களின் படகிலிருந்து தவறி விழுந்து, மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு செல்லும் போது உயிரிழந்தார்.கடற்படை வீரர் உயிரிழந்தது தொடர்பாக கங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், மீனவர்களின் தடுப்புக்காலம் புதன்கிழமை(11) முடிவடைந்ததை தொடர்ந்து மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, பத்து மீனவர்களில் 9 மீனவர்களை மீண்டும் இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்தால் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் விடுதலை செய்தும், விசைப்படகின் ஓட்டுநருக்கு ஒரு வருடம் சிறைத் தண்டனை விதித்தும், உயிரிழந்த கடற்படை வீரருக்கு இழப்பீடாக இலங்கை ரூ.35 இலட்சம் (இந்திய மதிப்பில் ரூ.10 இலட்சம்) வழங்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

# இலங்கை அபிவிருத்திக்கு ஐக்கிய அரபு அமீரகம் ஒத்துழைப்பு

இலங்கையை கட்டியெழுப்ப தற்போதைய அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய அரபு அமீரகம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குள் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை அதிகரிப்பதுடன், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப அறிவை பெற்றுத்தருவதாகவும் இலங்கைக்கான ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி (Khaled Nasser AlAmeri) தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் காலித் நசர் அல் அமேரி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று (12) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது 150,000 இலங்கையர்கள் தொழில் செய்து வருவதாகவும் அந்த தொகையை மேலும் அதிகரிப்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையின் ஆறாவது மிகப்பெரிய ஏற்றுமதி சந்தையாக ஐக்கிய அரபு அமீரகமே காணப்படும் நிலையில், அந்த சந்தை வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அதேபோல் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவை மேலும் பலப்படுத்திக்கொள்வதோடு இலங்கைக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உதவியையும் செய்யத் தயாராக இருப்பதாகவும் தூதுவர் இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் உறுதியளித்தார். எதிர்வரும் காலங்களில் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு



விஜயமொன்றை மேற்கொள்ளுமாறும், ஐக்கிய அரபு அமீரகத்தின் தூதுவர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு அழைப்பு விடுத்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் முழு அதிகாரமுள்ள மினிஸ்டர் பதவி வகிக்கும் அஹமட் எம்.ஏ.ஏ. அல் ஷெஹி உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 14,000 புள்ளிகளைக் கடந்தது

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக கொழும்பு பங்கு சந்தையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 14,000 புள்ளிகளைக் கடந்துள்ளது.

அதன்படி, நேற்றைய தினம் 150.72 புள்ளிகளைப் பெற்று அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 14,035.81 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன் எஸ் அன்ட் பி எஸ்எல் 20 பங்கு விலைச் சுட்டெண் 4,186 புள்ளிகளைப் பதிவு செய்துள்ளது.



இதற்கமைய நேற்று 7.35 பில்லியன் ரூபாய் மொத்த புரள்வாக பதிவாகியுள்ளது.

# பிளாஸ்ரிக் விற்பனை தொடர்பில் சோதனைகள்

பாவனைக்கு பொருத்தமற்ற பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் விற்பனை தொடர்பில் சோதனைகள் இடம்பெற்று வருவதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நாடளாவிய ரீதியில் முக்கிய நகரங்களைச் சுற்றியுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை நிலையங்களில் குறித்த சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அங்கு பாவனைக்கு பொருத்தமற்ற பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும் என்றார். மேலும், எதிர்வரும் வருடத்திலிருந்து குழந்தைகளுக்கு உணவுப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் போத்தல்கள் வாங்கும் போது, பெற்றோர்கள் இது குறித்து மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.



## ஒருவனின் நோக்கில்...

No. 752/5,Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# அரிசி - மற்றொரு போராட்டத்தின் ஆரம்பமா?

இலங்கையில்அரிசிதட்டுப்பாடுதற்போதுபேசுபொருளாகியுள்ளது. அரிசி மாபியா காரணமாக பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

எதிர்வரும் ஆண்டின் ஏப்ரல் மாதம் வரையில் தொடரும் பண்டிகைக் காலம் காரணமாக பொதுமக்களுக்கு அத்தியாவசியமான பொருட்களை நுகர ஆரம்பித்து விட்டனர். எனினும், தற்போது நாட்டில் அரிசி , தேங்காய் போன்றவற்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு பாரதூரமான சிக்கல்களை உருவாக்கி வருகிறது.

அதிலும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் தீர்வு ஒன்றை வழங்கியுள்ள போதிலும் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் நாட்டு அரிசி , சிவப்பு பச்சை அரிசி போன்ற மக்கள் அதிகளவில் நுகரும் அரிசி வகைகளுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் மக்கள் மேலும் மேலும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து அரசாங்கம் விசேட வர்த்தமானி ஒன்றை வெளியிட்டிருந்தது. அந்த வர்த்தமானியை மீறி அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள் தொடர்பில் ஆராய விசேட சுற்றிவளைப்புகளை நுகர்வோர் அதிகாரசபை மேற்கொண்டு வருகிறது.

குறித்த சுற்றிவளைப்புகளின் போது அதிக விலைக்கு அரிசி விற்பனையில் ஈடுபடுபவர்கள், அரிசி கையிருப்பை மறைத்து வைத்திருப்பவர்கள் எனப் பலர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரிசி தட்டுப்பாடு தொடர்பில் புதிய அரசாங்கம் வழங்கிய தீர்வுகள் நிச்சயமாக பாராட்டத்தக்கவை. அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் அரிசி கையிருப்புகள் சரியான முறையில் கடைகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பின்னணியில், இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு அறிவிடப்படும் வரியை குறைக்குமாறு அல்லது அரிசி விலையை அதிகரிக்குமாறு அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், குறித்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையினால் அரிசி இறக்குமதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. நாட்டில் அரிசி கையிருப்பு இல்லை என உருவான நெருக்கடிக்கு தீர்வாகவே அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டது. தொடர்ந்தும் அதிக வரி காரணமாக அரிசியை இறக்குமதி செய்வதிலும் தற்போது சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

ஏற்கனவே அரிசிக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானி மறுசீரமைக்கப்பட வேண்டும் என அரிசி வர்த்தகர்கள் கோரி வருகின்றனர். அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்படுவதால் அரிசி இறக்குமதியும் நிறுத்தப்படுகிறது. இதனால் பாதிக்கப்படுபவர்கள் வர்த்தகர்களோ, அரசாங்கமோ அல்ல பொதுமக்கள் மாத்திரமே.

எதிர்வரும் நாட்களில் சந்தையில் அரிசியை நுகர முடியாமல் போவதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் வாய்ப்புகள் உருவாகும். நேற்று தனியார் இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் முதலாவது தொகை சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையில் இறக்குமதியாளர்கள் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர்.

75,000 கிலோ அரிசி சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து சம்பா மற்றும் வெள்ளை பச்சை அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தொடர்ந்து இரு நாட்களுக்கு கூடுதலான அரிசி தொகை நாட்டை வந்தடைய உள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் அரிசி வர்த்தகர்கள், ஆலை உரிமையாளர்கள் இந்த இறக்குமதியுடன் அதிகளவு ஈடுபாட்டுடன் இல்லை என்பது தெளிவாகியுள்ளது.

தேர்தல் மேடைகளில் அரிசி மாபியாவுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று கோரிக்கைகளை முன்வைத்தே காரியங்களை நிறைவேற்றி வருகிறார். எனினும், அரசாங்கமாக வர்த்தகர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகளுக்கும் செவி சாய்க்க வேண்டும்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு வரி அறவிடுவது சாதாரணமாக இருந்தாலும் , அந்த வரி அதிகம் என வர்த்தகர்கள் முன்வைக்கும் கோரிக்கைக்கு செவி சாய்த்து வரியை குறைத்தார்களாக இருந்தால் நாட்டின் அரிசித் தட்டுப்பாட்டுக்கு ஒரு தீர்வு கிட்டும்.

வரி அறவிடுவது என்பது நாட்டுக்கு வருவாயை கொண்டு வரும் ஒரு விடயமாக இருந்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழலில் வர்த்தகர்களின் கோரிக்கையை அரசாங்கம் நிவர்த்தி செய்ய வேண்டும். அரிசி இறக்குமதியாளர்களுக்கும் வரி செலவு போக அரிசி விற்பனையால் கிடைக்கப்படும் தொகை குறைவாகவும் அதில் எதுவித இலாபமும் இல்லாத காரணத்தினாலேயே அவர்கள் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.

பெரும்பான்மையான மக்கள் ஆணையால் ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம், மக்களுக்காக செயற்படுவதையே தனது முழு நேரக் கொள்கையாக கொண்டுள்ளது. அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் அரசாங்கம் அதனை ஏற்று செயற்பட்ட விதம் அனைத்தும் பாராட்டத்தக்க விடயங்கள் ஆகும்.

எனினும், அதே மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு வர்த்தகர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் மேலெழ இருக்கும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண முடியும். அவ்வாறு இல்லையெனில், மீண்டும் ஒரு வரிசை யுகத்திற்கு இது வித்திடும் என்பதில் சந்தேகமெதுவுமில்லை.

# அநுரவின் இந்தியப் பயணம்

# பூகோள அரசியலில் ஏற்படுத்தும் தாக்கம்... ?





இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது முதலாவது அதிகாரப்பூர்வ வெளிநாட்டு பயணத்தை நாளை மறுதினம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை புதுடில்லிக்கு மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தப் பயணத்தின் போது, இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளை சந்திக்க உள்ளார். அத்துடன், பல்வேறு துறையினரையும் ஜனாதிபதி சந்திக்க திட்டமிட்டுள்ளதுடன், இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முதலீடுகளை ஈர்க்கும் சில சந்திப்புகளையும் அவர் மேற்கொள்ளவுள்ளார்.

### இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு தீர்மானங்களும் இல்லை.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட உயர்மட்ட அரச குழுவொன்று புதுடில்லி செல்ல உள்ளது. இந்தப் பயணத்தில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் சில ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட உள்ளன.

அநுரகுமார திசாநாயக்க இந்திய விஸ்தரிப்புவாதத்தை பேசிய ஜே.வி.பியின் தலைவராக உள்ள போதிலும், இலங்கையின் அடுத்த மக்கள் தலைவராக உருவெடுக்க போகிறார் என்பதை புலனாய்வு தகவல்கள் ஊடாக உணர்ந்த புதுடில்லி கடந்த ஆண்டு அவரை புதுடில்லிக்கு அழைத்து சிவப்பு கம்பள வரவேற்பை அளித்தது.

இந்தியா தொடர்பான ஜேவிபியின் வரலாற்று நிலைப்பாடு அநுரவின் இந்தப் பயணத்தின் பின்னர் சில மாற்றங்களுக்கு உள்ளானது என்பதுடன், இந்தியாவையை பகைத்துக்கொண்டு இலங்கையை அபிவிருத்திப் பாதைக்கு கொண்டுசெல்வது கடினம் என்பதையும் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தி உணர்ந்ததுடன், பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் எந்தவொரு தீர்மானத்தையும் எதிர்காலத்தில் அமையும் தமது அரசாங்கம் எடுக்காதெனவும் தெரிவித்திருந்தார்.

பாரம்பரியமாக தேசியவாதத்தை பேசிய கட்சியான ஜே.வி.பி, இலங்கைத் தீவில் இந்தியாவின் செல்வாக்கை நீண்டகாலமாக எதிர்த்திருந்தது. 1987ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது ஜே.வி.பி.யின் கடுமையான எதிர்ப்பு சர்வதேச ரீதியில் மிகவும் உச்சரிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கில் தமிழர் சுயாட்சிக்காக உருவாகிய சில வாய்ப்புகளையும் ஜே.வி.பியின் கடுமையான எதிர்ப்பே இல்லாதொழித்தது.

### பேசுபொருளாகுமா கச்சதீவு ?

பல தசாப்தங்களாக, ஜே.வி.பி இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டை விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம் (CEPA) போன்ற உடன்படிக்கைகளுக்கு எதிராக செயல்பட்டிருந்தது. 2008இல் "கச்சதீவை இந்தியாவிடம் ஒப்படைக்க இரகசிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாது." என அநுரகுமார திசாநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்க வேண்டும் என்பதையும் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பதையும் இந்தியா தொடர்ந்து இலங்கையிடம் வலியுறுத்தி வருகிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கச்சதீவு விவகாரம் இந்தியாவில் மிகவும் பேசுபொருளானதுடன், கச்சதீவை காங்கிரஸ்தான் இலங்கைக்கு வழங்கியது என பிரதமர் மோடி கூறியிருந்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான அரசியல் உறவுகள் கடந்த காலத்தில் வலுவாக இருந்த போதிலும் இந்திய விஸ்தரிப்புவாதத்தை பேசிய கட்சியாக உள்ள ஜே.வி.பியின் தலைவர் ஒருவர் முதன் முறையாக இலங்கையின் அரச தலைவராக இந்திய அரச தலைவரை சந்திக்கிறார். இதனால் கடந்தகால வரலாறுகளும் அவை ஏற்படுத்தியுள்ள தாக்கங்களும் இந்த சந்திப்பு குறித்து சர்வதேசம் உற்றுநோக்கியுள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையின் அரசாங்கங்கள் செய்துகொண்டுள்ள இருதரப்பு ஒப்பந்தங்களின் அடுத்தகட்ட நகர்வு எவ்வாறு இருக்கப் போகிறது, இலங்கையில் அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்கு தொடர்பில் மோடி அநுரவிடம் என்ன கூறப் போகிறார், இருநாட்டு பொருளாதார உறவுகள் எவ்வாறு வலுப்பெற போகிறது மற்றும் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் அநுரவிடம் மோடி கூறப் போகும் செய்தி என்ன என்பது தொடர்பில் பல்வேறு கருத்துகள் சர்வதேச மட்டத்தில் பேசுபொருளாக உள்ளன.

### மோடி கூறப்போகும் செய்தி?

புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட்டாலும் அதில் 13ஆவது திருத்தச்சட்டம் உள்வாங்கப்பட வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாக இருக்கும் என்பதே இந்திய அரசியல் ஆய்வாளர்களது கருத்தாகும். இதனை மோடி அநுரவிடம் உறுதியாக கூற உள்ளதாக இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இருதரப்பு ஒப்பந்தங்கள் குறித்து ஆழமான பேச்சு

இந்தியா தொடர்பில் அநுரகுமார திசாநாயக்க தனது தொனியை குறிப்பிடத்தக்க வகையில் மாற்றியுள்ளார் என்பதே அவரது பல கருத்துகள் எடுத்துரைக்கின்றன. அதன் காரணமாகவே தனது முதல் வெளிநாட்டு பயணத்துக்காக அநுர இந்தியாவை தேர்ந்தெடுத்துள்ளார்.

**கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கச்சதீவு விவகாரம் இந்தியாவில் மிகவும் பேசுபொருளானதுடன், கச்சதீவை காங்கிரஸ்தான் இலங்கைக்கு வழங்கியது என பிரதமர் மோடி கூறியிருந்தார்**


ஆட்சி மாற்றத்தின் பின்னர் முதல் இராஜதந்திரியாக இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இலங்கையின் பூகோள அரசியல் நகர்வுகள் இந்தியாவின் நலனுக்கு எதிராக அமையக் கூடாதென்ற செய்தியை தெரிவிக்கும் வகையில் இடம்பெற்றதாகும். வெளியுலகுக்கு அது சம்பிரதாயப்பூர்வமான அழைப்பை விடும் சந்திப்பாக காட்டப்பட்டாலும் அது இந்தியாவின் உள் எண்ண ஓட்டத்தின் நிகழ்ச்சி நிரலாகும்.

பூகோள அரசியலில் இயக்கவியலை அநுர மறுத்துச் செயல்பட்டால் அது மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியான சூழலை மீண்டும் தமது அரசாங்கத்துக்கும் ஏற்படுத்தும் என்பதை அநுர அறிந்தவராக இருப்பார் என்பதால் இந்தியாவின் கருத்துகளை அவர் புறக்கணித்து செயல்பட மாட்டார் என்றும் புதுடில்லி வழங்கப்போகும் சிவப்புக் கம்பள வரவேற்புக்கு மரியாதையளிக்கும் நபராகவே அநுர எதிர்காலத்தில் செயல்படுவார் என்றும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னாரில் முன்மொழியப்பட்ட காற்றாலை மின் நிலையம், இருநாடுகளையும் இணைக்கும் கடல்வழிப் பாலம், கேபிள் முறையில் மின்சாரப் பரிமாற்ற திட்டம் மற்றும் கடந்த அரசாங்கம் செய்துகொண்டுள்ள இருதரப்பு ஒப்பந்தங்கள் அநுரவின் இந்தப் பயணத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும் என்பதுடன், இவை தொடர்பிலான ஆழமான பேச்சுகள் இடம்பெறும் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. ■



சுப்ரமணியம் நிஷாந்தன்



# காய்ச்சலால் ஏற்பட்ட மரணம் ஏழாக அதிகரிப்பு



யாழில் ஏற்பட்டுள்ள மர்மக் காய்ச்சலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை ஏழாக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பருத்தித்துறையை சேர்ந்த மேலும் ஒருவர் நேற்று முன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

மர்மக் காய்ச்சல் பாதிப்புடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் குறித்த நபர் நேற்று முன்தினம் (11) இரவு உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறையை சேர்ந்த ஆனந்தகுமார் (வயது 47) என்ற நபரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அவசர சிகிச்சை பிரிவில் இருவர் உள்ளிட்ட இருபது பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மர்மக் காய்ச்சல் அறிகுறிகளுடன் சிகிச்சை பெற்று வந்திருந்த நிலையில் மேலும் பலர் காய்ச்சல் அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மர்மக் காய்ச்சல் காரணமாக 30 நோயாளிகள் அனுமதி

மர்மக் காய்ச்சல் காரணமாக நேற்று (12) காலையிலிருந்து முற்பகல் வரை முப்பது நோயாளிகள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை(12) காலை முதல் முற்பகல் வரை ஆறாம் இலக்க விடுதியில் 18 பேரும் 9-ம் இலக்க விடுதியில் ஆறு பேரும் அவசர சிகிச்சைப் பிரிவில் இருவரும் அனுமதிக்கப்பட்டனர்.பின்னர் மேலதிகமாக நால்வருமாக முப்பது பேர் முற்பகல் வரை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சிகிச்சைகள் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# வவுனியாவில் மாற்றுத்திறனாளிகள் விழிப்புணர்வு ஊர்வலம்

கி.வசந்தன்

இயலாமையுடன் கூடிய நபர்களுக்கான சர்வதேச தினமான நேற்று மாற்றுத்திறனாளிகளால் வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலமொன்று முன்னெடுக்கப்பட்டது.




அந்தவகையில் உள்வாங்கல் மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக இயலாமையுடைய வர்களின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தல் எனும் தொனிப்பொருளில் வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமான ஊர்வலம் வைத்தியசாலை சுற்று வட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தை அடைந்தது. ஏனைய நிகழ்வுகளும் அங்கு இடம்பெற்றன.

குறித்த நிகழ்வை வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் ஓஹான் நிறுவனம் ஆகியவை இணைந்து நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு - மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 165 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.
(படம் : கரவெட்டி நிருபர்)

# யாழ்.மாவட்ட அபிவிருத்தி மீளாய்வுக்கூட்டம்





பு.கஜிந்தன்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம்(11) மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர்,

வேலைத்திட்டங்களை குறுகிய காலத்தில் நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சவால்களை ஏற்று செயற்பட்டவர்களை பாராட்டுவதாக தெரிவித்த அவர்,

இளைஞர் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் தொடர்பாக ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் கடும் முயற்சிகள் எடுத்துவருவது எமது இளைஞர் சமுதாயத்திற்கு ஆரோக்கியமான விடயம் எனத் தெரிவித்ததுடன், அவ் உபகரணங்களின் பாவனை தொடர்பாக பிரதேச செயலக ரீதியான கண்காணிப்பு அவசியமானது. வேலைத்திட்டங்களில் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படுவதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

மேலும், நலன்புரி நன்மைகள் (அஸ்வெசும) தொடர்பிலும் ஆராயப்பட்டது.

# இளம் குடும்பஸ்தரை காணவில்லை



யாழ்ப்பாணம் நவாலி பகுதியைச் சேர்ந்த பரராஜசிங்கம் கஜமோகன் என்ற இளம் குடும்பஸ்தரை காணவில்லை என சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை (09) வீட்டிலிருந்து சென்றவரை காணவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் அவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளனர்.

தகவல் தெரிந்தவர்கள் 0753823347,0766663319 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீசாலை பகுதியில் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

பு.கஜிந்தன்



காரைநகர் பகுதியில் 213 கிலோ 800 கிராம் எடையுடைய கஞ்சாவுடன் சாவகச்சேரி – மீசாலை பகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

51ஆவது படைப்பிரிவு இராணுவ முகாமைச் சேர்ந்த புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய தேடுதல் நடத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (11) அதிகாலை மேற்கொள்ளப்பட்ட கைது நடவடிக்கையின்போது 213 கிலோ 800 கிராம் எடையுடைய கஞ்சா மற்றும் ஒரு படகு என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சான்றுப் பொருட்களுடன் ஊர்காவல்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

# மர்மக் காய்ச்சல்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தல்கள்...



ஆ.நரேன்

யாழ்ப்பாணத்தில் பரவிவரும் மர்ம காய்ச்சலால் பொது மக்கள் அவதானமாக செயற்படுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தை தொடர்ந்து பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது. இக் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இந்த இறப்புக்களில் இரண்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் இரண்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஒன்று கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஏற்பட்டுள்ளன. யாழ். போதனா வைத்தியசாலையில் இறந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராக காணப்படுவதோடு எல்லா இறப்புக்களும் சுவாசத்தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் பன்னிரெண்டு நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் இருபத்தொரு நோயாளர்களுமாக மொத்தமாக இதுவரை முப்பத்து மூன்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சலுடன் இருபது நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக் காய்ச்சலானது எலிக் காய்ச்சலாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இக் காய்ச்சல் எந்த வகையானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் குருதி மாதிரிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எலிக்காய்ச்சலானது மழை வெள்ளத்தில் எலி, ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எச்சங்கள் கலப்பதன் மூலம் இந்நோய்க்கிருமிகள் வெள்ள நீரினில் கலக்கின்றன. பொதுமக்கள் இந்த வெள்ளநீரில் நடக்கும் போது அல்லது அவர்களின் உடம்பில் படும் போது அவர்களது தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் மூலம் உடலின் குருதிச் சுற்றோட்ட தொகுதியை சென்றடைந்து எலிக்காய்ச்சல் நோய் உண்டாகிறது. மேலும் இக்கிருமிகள் கலந்த அசுத்தமான நீரைப் பருகுவதனாலும் எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.


இக்காய்ச்சலிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் விடயங்களை பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம்.


1. காய்ச்சல் ஏற்பட்டால் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடவும். காய்ச்சல் ஏற்பட்டு தாமதமாக அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தந்தமையினாலேயே பெரும்பாலான இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.
2. தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி நேரடியாக மருந்தகங்களில் மருந்துகள் வாங்கிப் பாவிப்பதை தவிர்த்துக் கொள்ளவும்.
3. தற்போதைய காலப்பகுதியில் அவசியமின்றி வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.
4. வயல்கள் சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் கால்களுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிந்துகொள்ள வேண்டும். கால்களில் காயங்கள் அல்லது புண்கள் உள்ளவர்கள் வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக் கொள்ளவும்.
5. கட்டாயமாக கொதித்து ஆறிய நீரைப் பருகவும்.
6. வெள்ள நீரினால் அசுத்தமான கிணறுகளை இறைத்து குளோரின் இடவும்.
7. தற்போதைய காலப்பகுதியில் வெள்ள நீரால் நிரம்பியுள்ள குளங்களில் குளிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.
8. தற்போது நோய் பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகான்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக் கொள்ளலாம்.


எனவே பொதுமக்கள் மேற்படி ஆலோசனைகளை பின்பற்றி இந்த நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.




# நூற்றாண்டை கொண்டாடும் சென்னை ரங்கநாதன் தெரு



செல்லமாகவோ அல்லது சுருக்கமாகவோ தி – நகர் என அழைக்கப்படும் தியாகராய நகர், சென்னையின் தூங்காநகரம் என்றே சொல்லலாம்.

கடந்த 1923ஆம் ஆண்டு தியாகராய நகர் உருவாக்கம் ஆரம்பித்து, 1925ல் செயல்பட ஆரம்பித்தது. தியாகராய நகர் ஒரு நூற்றாண்டு வரலாற்றை கொண்டிருக்கிறது. குடியிருப்புப் பகுதியாக உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் தான் தியாகராய நகரின் உருவாக்கம் இருந்தது என்று கூறுகின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

ஆனால், பாண்டிபஜாரும், ரங்கநாதர் தெருவும் வாடிக்கையாளர்களின் கூட்டத்திற்கு மத்தியில் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்க, இந்த முக்கியமான தெருக்கள் தியாகராயநகரின் அடையாளங்களாக மாறிவிட்டன.

தியாகராய நகர் உருவான பத்து–இருபது ஆண்டுகளிலேயே இந்த பகுதியில் பல்வேறு அங்காடிகள் செயல்பட ஆரம்பித்தன. தியாகராய நகர் வீதியில் வாணிபமும், வர்த்தகமும் அதிகரிக்க, தென் தமிழகத்தில் இருந்து வந்த பலர், சிறிய அளவில் கடைகள் ஆரம்பித்து, இன்று தங்களின் சொந்த வணிகங்களின் கிளைகளை பல்வேறு இடங்களில் உருவாக்கியுள்ளனர்.

மறுபுறம் வாடகை, நுகர்வு கலாசார போக்கில் ஏற்பட்ட மாற்றங்கள், வணிக தோல்விகள், பொருளாதார நெருக்கடிகள் போன்றவை பல கடைகளை மூட வழி வகை செய்தது. ஆனால், ஒரு சில கடைகள் இன்றும் தங்களின் வாடிக்கையாளர்களுக்காக 60, 70 ஆண்டுகளாக இயங்கி வருகின்றன.

**குடியிருப்புப் பகுதியாக உருவாக்க நினைத்த தியாகராய நகர் வணிக பகுதியாக மாறியது எப்படி?**

அரை நூற்றாண்டை கடந்தும் இங்கு வணிகம் செய்து வரும் பாரம்பரிய கடைகள் எவை? காலம் கடந்த பிறகும் இந்த வணிக பகுதி தனித்துத் தெரிய காரணம் என்ன என்பதை விளக்குகிறது இந்த கட்டுரை.

அடித்தளமிட்ட மாம்பலம் ரயில் நிலையம்

“மாம்பலம் ரயில் நிலையம் உருவாக்கப்பட்டதும், அது உருவாக்கிய புதிய வாய்ப்புகளும் தான் தியாகராய நகரின் இன்றைய வளர்ச்சிக்குக் காரணம்,” என்று கூறுகிறார் அஷ்மிதா ஆத்ரேயா.

சென்னையின் எழும்பூரை காஞ்சிபுரத்துடன் இணைக்கும் ரயில்வே சேவையின் ஒரு பகுதியாக மாம்பலத்தில் ரயில்வே நிலையம் 1911ம் ஆண்டு கட்டப்பட்டது.

வரலாற்று ஆய்வாளரான அஷ்மிதா, “மெட்ராஸ் இன்ஹெறிட்டட்“ என்ற நிறுவனத்தின் கீழ், சென்னையின் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் மரபு நடைகளை மேற்கொண்டு வருகிறார். மெட்ராஸ் இன்ஹெறிட்டட் நிறுவனத்தின் “ஹெட் ஆஃப் ஆப்பரேஷனாக” பணிபுரியும் அவர், மாம்பலம் ரயில் நிலையம் தியாகராய நகரின் வளர்ச்சியில் எத்தகைய முக்கிய பங்கை வகித்தது என்று விளக்கினார்.

”இந்த ரயில்வே லைன் தான் மேற்கு மாம்பலத்தையும், இன்று தியாகராய நகராக இருக்கும் கிழக்கு மாம்பலத்தையும் பிரிக்கும் உயிர் நாடியாக இருந்தது. இங்கு ரயில் நிலையம் வந்தது, தென் தமிழகத்தில் இருக்கும் பலரையும் இங்குள்ள பொருளாதார வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வழிவகை செய்தது. 1928ம் ஆண்டுக்கு முன்பு வரை காஞ்சிபுரத்தில் இயங்கி வந்த நல்லி குடும்பத்தினரை இதற்கு ஒரு உதாரணமாக கூறலாம்.

சின்னசாமி செட்டியார் பட்டுப்புடவைகளை காஞ்சிபுரத்தில் இருந்து மாம்பலத்திற்கு கொண்டு வந்து, பிறகு அங்கிருந்து மயிலாப்பூரில் விற்பனை செய்துவிட்டு செல்வதை வாடிக்கையாக கொண்டிருந்தார். மாம்பலத்தின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு, 1928ம் ஆண்டு நல்லியை சென்னையில் நிறுவினார்கள்,” என்று கூறுகிறார் அஷ்மிதா.

ரயில் போக்குவரத்து வணிகர்களையும், நுகர்வோரையும் தியாகராய நகரில் ஒன்றிணைத்தது. இந்த வணிக பகுதியின் உருவாக்கத்தில் பல மரங்களும், வன உயிரினங்களும் மறைந்தன. ரங்கநாதர் நகரில் வசித்து வந்த எழுத்தாளர் அசோகமித்ரன் தன்னுடைய ஒரு பார்வையில் சென்னை நகரம் புத்தகத்தில், தியாகராய நகரில் குள்ளநரிகள் வாழ்ந்ததை குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த 2013ம் ஆண்டு எக்கனாமிக் டைம்ஸ் வெளியிட்ட கட்டுரையின் படி, தங்க நகைகள் விற்பனை மற்றும் ஆடை விற்பனை மூலமாக தியாகராய நகரில் இருக்கும் கடைகள் ஆண்டுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயை ஈட்டுவதாக குறிப்பிட்டிருந்தது.

அதிகாரிகள் ரூ.10 ஆயிரம் கோடியாக(இந்திய ரூபாய்) இந்த மதிப்பைக் கூறினாலும், 10 ஆண்டுகளுக்கு முன்பு தியாகராய நகரில் வந்த வருவாயானது, மும்மையின் லிங்கிங் சாலை, புது டெல்லியின் கன்னோட் ப்ளேஸ், பெங்களூருவின் ப்ரிகேட் சாலை பகுதியில் நடைபெறும் வர்த்தகங்கள் மூலம் கிடைக்கும் வருவாயைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகம் என்று மேற்கோள்காட்டியுள்ளது.

எனினும், இக்காலகட்டத்தில் தி.நகரில் நடைபெறும் வணிகத்தின் மதிப்பு என்ன என்பது குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் இல்லை.பாரம்பரியமாக இயங்கி வரும் அங்காடிகள்

**கேரளா ஹேர் ட்ரெஸ்ஸர்**

தி–நகரின் உருவாக்கம் தொடங்கி ஒரு நூற்றாண்டை நாம் இன்று அடைந்துள்ள நிலையில், காலத்தின் ஓட்டத்தைக் காலம் கடந்து நின்று கவனித்த அங்காடிகள் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் தியாகராயநகர் (பாண்டி பஜார்) சாலையில் இன்னும் செயல்பட்டு வருகின்றன.

அஷ்மிதா நடத்திய மரபு நடையில் கேரளா ஹேர் ட்ரெஸ் ஸர் கடையைப் பற்றி பேசினார். 1939ம் ஆண்டு வி. சங்குண்ணி நாயரால் உருவாக்கப்பட்டது இந்த முடித்திருத்தும் கடை.

இந்த காலத்தில் இருப்பது போன்ற சலூன் அல்ல அது. பெல்ஜியம் கண்ணாடிகள், பழமையான கடிகாரம், முடி வெட்ட வரும் வாடிக்கையாளர்களுக்காகவே உருவாக்கப்பட்ட இருக்கைகளும் 1939 முதல் 2024 வரை எந்த வித மாற்றமும் இன்றி தொடர்ந்து வருகிறது என்கிறார், தற்போது அந்த கடையை நடத்தும் சங்குண்ணி நாயரின் பேரன் சந்தீப்.

மூன்று தலைமுறைக்கும் மேலாக இயங்கி வரும் இந்த கடையில் ஒரு காலத்தில் நடிகர்கள் சத்யராஜ், சிவகுமார், மறைந்த நடிகரும் அரசியல் கட்சித் தலைவருமான விஜயகாந்தும் தங்களுக்கான சிகை அலங்காரத்தை செய்திருக்கின்றனர்.

பளபளக்கும் எழுத்துகளிலும் பதாகைகளிலும் பல கடைகள் அந்த தெருவில் அமைந்திருந்தாலும், கேரளா ஹேர் ட்ரெஸ்ஸ ர்ஸ் பெரிய அளவில் எந்த விதமான மாற்றத்தையும் கடையின் தோற்றத்தில் செய்யாமல் இப்போதும் தொடர்ந்து வருகிறது.

**பாண்டியன் காஃபிஸ்**

ஃபில்டர் காஃபி பொடியை தயாரிக்கும் கடை இது. அதிகாலை 5 மணி முதல் 6.30 மணி வரை, உணவகங்களுக்காக காஃபி பொடியை தயாரித்து விநியோகத்திற்கு வழங்கிவிட்டு, தங்களின் வாடிக்கையாளர்களுக்காக தினமும் 9 மணிக்கு மேல், எந்த விதமான ஆரவாரம் இன்றி இயங்குகிறது இந்த சிறிய கடை.

கேரளா ஹேர் ட்ரெஸ்ஸரைப் போன்றே மூன்றாவது தலைமுறையாக இந்த கடை பாண்டி பஜாரில் இயங்கி வருகிறது. மகாலிங்கம் என்பவர் இந்த கடையை 1958ம் ஆண்டு நிறுவினார்.

அவருடைய சகோதரர் பாண்டியன் பெயரில் இந்த கடை தொடங்கப்பட்டது. இன்று அதனை ராமலிங்கம் என்ற நபர் நடத்தி வருகிறார்.

1880கள் தொடங்கி 1950கள் வரையிலான காலகட்டத்தில் விளம்பரங்களுக்காக பயன்படுத்தப்பட்ட “எனாமல் சைனேஜ்“ பாணியில், மிகவும் எளிமையான “சைன் போர்டோடு“ வரவேற்கிறது இந்த கடை.

“இந்த பகுதிகளில் இருக்கும் பழைய கடைகளை இந்த சைன் போர்டுகள் வைத்தே அடையாளம் கண்டுவிட இயலும். எந்தவிதமான கவர்ச்சிகரமான விளம்பரங்கள் ஏதுமின்றி, பாண்டியன் காஃபிஸ் இன்றும் இயங்கி வருகிறது. கடை தொடங்கப்பட்ட காலத்தில், இப்பகுதி குடியிருப்புப் பகுதியாக உருவாக தொடங்கியது. இங்குள்ள மக்கள் தினமும் “ஃப்ரெஷ்ஷாக காஃபி“ பொடியை வாங்க இந்த கடைக்கு வருகை புரிந்தது உண்டு,” என்று இந்த கடைக்கான வரலாற்றை கூறுகிறார் அவர்.

காலத்தின் வேகத்தில் மாறும் தியாகராய நகரின் தனித்த அடையாளங்கள்

பாண்டி பஜாருக்கான பெயர் காரணங்கள் இரண்டாக இருக்கிறது என்கிறார் அஷ்மிதா. ”ஒன்று, மெட்ராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் உறுப்பினரும், சுயமரியாதை இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகவும் கருதப்படும் ஊதம்பட்டி புன்னைவன அய்யா சௌந்தரபாண்டியன் அவரின் பெயரில் அங்காடி தெரு அமைக்கப்பட்டு, இறுதியில் பாண்டி பஜாராக மாறியது என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

மற்றொன்று, தியாகராய நகர் உருவாகி வந்த போது பாண்டிச்சேரியை சேர்ந்த தொழில்முனைவோரான சொக்கலிங்க முதலியார், 10க்கும் மேற்பட்ட வணிக தளங்களை உருவாக்கினார்.

பாண்டிச்சேரியை சேர்ந்தவர் என்பதால் இதற்கு பாண்டி பஜார் என்ற பெயர் வந்திருக்கலாம் என்றும் சிலர் வாதிடுகின்றனர்,” என்று கூறினார்.

அவர் உருவாக்கிய கட்டடங்கள் பல இன்று இப்பகுதியில் இல்லை. ஆனால், அலங்கார் ஆடையகம் இருந்ததால் அலங்கார் காம்ப்ளக்ஸ் என்று அழைக்கப்பட்ட அந்த ஒரு கட்டடம் மட்டும் பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகும் பழைய கட்டடக் கலையின் நுணுக்கத்தோடு காணப்படுகிறது.

பிரதான நுழைவின் மேலே பெண் தெய்வம் ஒன்றும் அதற்கு இரண்டு பக்கமும் யானைகள் இருப்பது போன்றும் சிலை வடிக்கப்பட்டுள்ளது. முதல் தளத்தின் தூண்கள் கலை நயத்தோடு உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும், மாடியின் சுவர்களும் கலைநயத்தோடு கட்டப்பட்டிருப்பதை இன்றும் பொதுமக்கள் காண முடியும்.

அலங்கார் காம்ப்ளக்ஸில் அலங்கார் ஆடையகம் செயல்பட்டு வந்த இடத்தில் இன்று க்ராக்ஸின் கடை உள்ளது. பல பத்தாண்டுகளாக இங்கே செயல்பட்டு வந்த வில்சன் மருந்தகம் மூடப்பட்டுவிட்டது.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் தலைவருமான மறைந்த கருணாநிதி பயன்படுத்திய பேனாவை உருவாக்கிய காமா பென்ஸின் கிளை தியாகராய நகரில் இருந்தது.

கடந்த 1928ம் ஆண்டு பாரிஸ் கார்னரில் செயல்பட ஆரம்பித்த காமா பென்ஸ், இந்தியாவின் பழமையான பேனா உற்பத்தியாளர்களில் ஒன்றாக இருக்கிறது. கடந்த ஆண்டு, தியாகராய நகரில் செயல்பட்டு வந்த அதன் கிளை மூடப்பட்டுவிட்டது.

**அங்காடிகள் சந்திக்கும் பிரச்சினைகள்**

“இங்கு பலகாலமாக இயங்கி வந்த கடைகளில் பெரும்பாலானவை வாடகைக்கு இயங்கி வந்தவை. தற்போது மிகப்பெரிய பிராண்டுகளின் கிளைகள் அதிக வாடகைக்கு தியாகராயநகரில் கடைகளை வைக்க முன்வரும் போது, பாரம்பரியமாக இயங்கி வரும் கடைகள் அவற்றுடன் போட்டியிடுவதில் கடும் சவால்களை சந்திக்கின்றன,” என்கிறார் அஷ்மிதா.

பிபிசி தமிழிடம் பேசிய கேரளா ஹேர் ட்ரெஸ்ஸரின் தற்போதைய உரிமையாளர் சந்தீப், ”வாடகை என்பது உண்மையாகவே சவாலான ஒன்றாக இருக்கிறது,” என்று ஒப்புக் கொண்டார்.

”முடிதிருத்தும் கடைகளை பொறுத்தவரை ஒரே விதமான கட்டணங்கள் அனைத்து கடைகளிலும் பின்பற்றப்படுவதில்லை. போட்டிகள் அதிகரிக்கின்ற சூழலில், சிலர் நாங்கள் நிர்ணயிக்கும் விலைகளுக்கும் குறைவான விலையில் இந்த சேவைகளை வழங்குகின்றனர். அவர்களோடு போட்டியிட்டு இந்த துறையில் நீடித்தாலும் கூட, அதில் லாபம் இல்லை. மேலும் இந்த வருமானம், வாடகை உள்ளிட்ட பல செலவுகளை ஈடுகட்ட போதுமானதாக இருப்பதில்லை” என்றும் கூறுகிறார்.

நீதிக் கட்சிக்கும் இன்றைய தமிழ்நாட்டு அரசியலிலும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக திகழ்ந்து வருகிறது தியாகராய நகர்.

காலத்தின் வேகம், மக்களின் தேவை, சாலை வசதிகள் விரிவாக்கம் போன்ற காரணங்களால் காலத்தின் கதைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் மரபு சின்னங்கள், அடையாளங்கள் கொஞ்சம் கொஞ்சமாக மக்களின் கண்களில் இருந்தும், நினைவுகளில் இருந்தும் அழிந்து கொண்டே வருகிறது. நூற்றாண்டு பிறந்த நாளை கொண்டாடும் தியாகராய நகரும் அதற்கு விதிவிலக்கல்ல.

**- நன்றி பி.பி.சி...**



# கிழக்கு மாகாண அரச இலக்கிய விருது வழங்கல் விழா



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாண கலாசார மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய மாகாண அரச இலக்கிய விருது விழா நேற்று முன்தினம் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் (11)நடைபெற்றது.

கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எஸ்.நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார். இதில் கிழக்கு மாகாணத்தில் கடந்த 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட வாழ்நாள் சாதனையாளர்களுக்கான விருது, பல்துறை கலைஞர்களுக்கான வித்தகர் விருது, இளங்கலைஞர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இந்நிகழ்வு மாகாண மண்டபத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த புத்தகம் மற்றும் சஞ்சிகைகளுக்கான விருதுகளும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டன. கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களோடு நடைபெற்ற இந்த மாகாண இலக்கிய விருது வழங்கல் விழாவில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தின் கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாண செயலகத்தின் அரச உயர் அதிகாரிகள், மாகாண பணிப்பாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், இலக்கிய அதிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். மாகாணத்தின் முன்னேற்றத்திற்கும் தேசத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்து வரும் கலைஞர்களின் பணிகளை ஊக்குவித்து மாகாண ரீதியான அங்கீகாரத்தை கலைஞர்களுக்கு வழங்குவதில் தாம் பெருமை அடைவதாக இங்கு உரையாற்றிய மாகாண ஆளுநர் தெரிவித்தார். கடந்த மூன்று ஆண்டுகளாக கலைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விருதுகளும் பாராட்டு கௌரவிப்புகளும் பல்வேறு தடைகள் காரணமாக வழங்கப்படாமல் இருந்த போதிலும் தற்போது பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் நாம் இதனை நிறைவு செய்திருக்கிறோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கலைஞர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். நவநீதன் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# எலிக்காய்ச்சல் நோய் எந்தநேரமும் பரவும் அபாயம்

(காத்தான்குடி நிருபர், ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



எலிக்காய்ச்சல் நோயின் தாக்கம் எந்த நேரமும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரிய அளவில் அதிகரிக்க கூடிய வாய்ப்புள்ளது. பொதுமக்கள் உங்களது உயிரைக் காத்துக் கொள்ள இந்த நோய் சம்பந்தமான விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமென மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.முரளீஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

குறிப்பாக எலிக்காய்ச்சல் நோயின் தாக்கம் விடயம் தொடர்பில் விவசாயிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் 74 எலிக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். இதில் கடந்த மாதம் நான்கு பேர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

பொது மக்கள் எலிக்காய்ச்சல் நோய் சம்பந்தமாக எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். இந்த எலிக்காய்ச்சல் நோயானது வயல்களிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் வசிப்பவர்களை இந்த நோய் பெரிதும் பாதிக்கின்றது. வயல்களில் காணப்படுகின்ற வெள்ளநீர் அல்லது அப்பகுதியில் காணப்படுகின்ற தேங்கிநிற்கும் நீர் நிலைகளில் பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் அதனைப்பாவிக்க வேண்டும்..

விவசாயிகள் நீர் நிலைகளில் குளிப்பவர்கள், அதனை குடிப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் . கூடியளவு இவ்வாறான பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் கொதித்தாறிய நீரை குடிக்க வேண்டும். வயல்களில் இறங்கி வேலை செய்பவர்கள் போதிய பாதுகாப்பு அங்கிகளுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த எலிகாய்ச்சல் நோய் சம்பந்தமான மேலதிக தகவல் தேவைப்படுபவர்கள் அண்மையில் உள்ள சுகாதார அலுவலகத்தை நாடி வைத்திய ஆலோசனைகளைப்பெற்றுக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்த

# இளைஞர் வள நிலையம் திறப்பு

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)



இளைஞர்,யுவதிகளின் ஆளுமைத் திறனையும் பொருளாதார அபிவிருத்தி யையும் மேம்படுத்தும் நோக்கத்திற்காக இளைஞர் வள நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார். திருகோணமலை மாவட்டச் செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் ஹெல்விற்றாஸ் சிறிலங்கா உதவு நிறுவனத்தினால் நிதியளிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்துக்கான இளைஞர் வள அபிவிருத்தி நிலையம் லிங்கநகரில் கடந்த புதன்கிழமை வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாவட்டச் செயலாளர் ஹெட்டியாராச்சி, இந்த மாவட்டத்திலே இருக்கின்ற இளைஞர், யுவதிகளின் ஆற்றல் திறன்களை இனம் கண்டு அவர்களது ஆக்கபூர்வமான முயற்சிக்கு அரச நிருவாகத்தின் சார்பிலே அத்தனை ஆதரவையும் வழங்க முடியும். இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் நாம் ஏதாவது திட்டங்களைச் செய்ய அவர்களிடம் கேட்டுக் கொண்டால் அந்த விடயத்தை உடனடியாக முன்வந்து நிறைவேற்றித் தருவதில் அவர்கள் ஆர்மாக இருக்கிறார்கள் என்றார்.

இந்நிகழ்வில், ஹெல்விற்றாஸ் சிறிலங்கா உதவு நிறுவன திட்ட முகாமையாளர் கௌசிகன் சிவலிங்கம், திருகோணமலை மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கலாதேவி உதயராஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி எஸ். யுவராஜ்குமார், திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான இணைப்பாளர் ஏ.எம்.எஸ்.பி. அத்தநாயக்க, திருகோணமலை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி அலுவலர் சுவர்ணா தீபானி உட்பட இன்னும் பல அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், இளைஞர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், இளைஞர் யுவதிகள் சமூக மட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கிழக்கு புதிய தளபதியாக பிரேமரத்ன

கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் கே.வி.என்.பீ பிரேமரத்ன கிழக்கு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார். புதிய தளபதிக்கு, இலங்கை பீரங்கி படையணி படையினர் பாதுகாவலர் அறிக்கையிடல் மரியாதை மற்றும் அணிவகுப்பு மரியாதை வழங்கி வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து மத ஆசீர்வாதங்களுக்கு மத்தியில் உத்தியோகபூர்வ ஆவணத்தில் கையொப்பமிட்டு கடமைகளை பொறுப்பேற்றார். பின்னர் மரக்கன்று நட்டு குழு படம் எடுத்துக் கொண்டார்.



# கிழக்கு ஆளுநருடன் ஐ.நா பிரதிநிதி சந்திப்பு



கியாஸ் ஷாபி

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்துக்கான (UNFPA) பிரதிநிதி குன்லே அதெனிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, கலந்துரையாடலின் போது, கிழக்கு மாகாணத்தில் உள்ள சமூகங்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகளுக்கு ஆதரவளிக்க பல்வேறு பங்குதாரர்களுடன் UNFPA இன் தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குவதற்கு தயாராக இருப்பதாக அதேனி உறுதியளித்தார்.

பெண்கள் மற்றும் சிறுமிகளின் ஆரோக்கியம், பாலின சமத்துவம் மற்றும் காலநிலை மீள்தன்மை போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்துவதை அவர் முன்னிலைப்படுத்தினார். அத்தோடு, இந்த முயற்சிகளில் ஆளுநரின் தொடர்ச்சியான ஆதரவினை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், கிழக்கு மாகாணத்தின் பல்கலா சாரத் தன்மையை அங்கீகரித்து, அதன் பன்முகத்தன்மையை பலமாகப் பார்க்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும், மாகாணத்தில் சமூக மற்றும் இன நல்லிணக்கத்தையும், பாலின சமத்துவத்தையும் மேம்படுத்துவதே தனது முதன்மையான கவனம் என்று அவர் கூறிய ஆளுநர், குடும்ப வன்முறைகள் அதிகமாக இருப்பதையும் சுட்டிக்காட்டி, பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

அதெனி, ஆளுநரை சந்தித்தமையையிட்டு, நன்றி தெரிவித்ததோடு, ஆளுநரின் பதவி ஏற்புக்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

## கிண்ணியா - கண்டலடிஊற்றில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்



கியாஸ் ஷாபி

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு, கிண்ணியா நகரசபை பிரிவுக்குட்பட்ட கண்டலடிஊற்று பகுதியில் நேற்றுமுன்தினம் (11) சிரமதான பணிகள் நடைபெற்றன.

சிரமதான பணியை, கிண்ணியா நகரசபைச் செயலாளர் எம்.கே.அனீஸ் உத்தியோபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இதன் போது, டெங்கு நோய் பரவக்கூடிய ஆபத்தான, நீர் தேங்கி நிற்கும் இடங்கள் இனங்காணப்பட்டு, அவை துப்புரவு செய்யப்பட்டதுடன், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, ஆறுகள், ஏரிகள் ஆகியவற்றில் இருந்து குப்பைகளும் கூளங்களும் அகற்றப்பட்டு, அவை அழகுப்படுத்தப்பட்டன.

கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச இளைஞர் சம்மேளனம், அல் றவ்லா இளைஞர் கழகம் இணைந்து பெரண்டினா நிறுவனத்தின் முழு அனுசரணையுடன் இந்த சிரமமான நிகழ்வு இடம்பெற்றது.

## வார நாட்களில் மீண்டும் நீச்சல் தடாகம் திறப்பு

அக்கரைப்பற்று நிருபர்

சீரற்ற காலநிலையால் செயற்படாமல் இருந்த அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் நீச்சல் தடாகம் மீண்டும் வார நாட்களில் மாலை 3.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரையும், வார இறுதி நாட்களில் காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரையும் பயன்படுத்துவதற்கு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஓய்வு நேரங்களில் நீச்சல் பயிற்சிகளை பெற்றுக் கொண்டு உடலையும் உள்ளத்தையும் உறுதியாக்கிட நீச்சல் தடாகத்தை சிறிய கொடுப்பனவுடன் பயன்படுத்திக் கொள்ளுமாறு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்

## மருந்து பொருட்கள் கையளிப்பு



றிஸ்வான் சாலிஹி

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு பாலமுனையைச் சேர்ந்த வை.எல். ஹாஜறா (தாதிய உத்தியோகத்தர் வை.எல். சிறாஜின் தாயார்) வினால் ஒரு தொகுதி மருந்து பொருட்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர். ஐ.எம்.ஜவாஹிரிடம் கையளிக்கப்பட்டது.

## வியட்நாமில் சர்வதேச டேக்வொண்டோ போட்டி; புத்தளம் மாணவி சாதனை

எம்.யூ.எம்.சனூன்

வியட்நாமில் நடைபெற்ற “2024 ஆசிய பொலிஸ் டேக்வொண்டோ” சம்பியன்ஷிப் போட்டிகளில் புத்தளம் நகரை சேர்ந்த ராசிக் பரீத் மஸ்யத் ஸாரா எனும் மாணவி *sparring Junior* 355 கி.கி. எடைப் பிரிவில் வெள்ளி பதக்கத்தையும் *poomsae Junior* 2 பிரிவில் வெண்கல பதக்கத்தையும் சுவீகரித்து இலங்கை நாட்டுக்கும் தனது புத்தளம் மண்ணுக்கும் பெருமையை பெற்றுக்கொடுத்துள்ளார்.

உலக பொலிஸ் டேக்வொண்டோ சம்மேளனத்தினால் ”வியட்நாம் 2024 ஆசிய பொலிஸ் டேக்வொண்டோ சம்பியன் ஷிப் போட்டி” அண்மையில் வியட்நாமின் ஹாலோங் நகரில் நடைபெற்றது.

29 நாடுகள் பங்கு பற்றிய இப்போட்டியில் இம்மாணவி புத்தளம் கே.கே.டி. கழகத்தினை பிரதிநிதித்துவப் படுத்தி இப்போட்டியில் பங்கேற்றிருந்தார்.

இவர் மதுரங்குளி எக்ஸலன்ஸ் பாடசாலையின் மாணவியும், புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் ஆவார்.



இம்மாணவி புத்தளம் மூன்றாம் குறுக்குத் தெரு மர்ஹூம் ராசிக் பரீத் மற்றும் பாயிஸா தம்பதிகளின் புதல்வியாவார்.

## அஹதிய்யா பாடசாலை சாதனை

எம்.எச்.எம்.சியாஜ்

கற்பிட்டி அல் அக்ஸா அஹதிய்யா பாடசாலையில் இருந்து இம்முறை இடம்பெற்ற 2023/2024 ஆண்டிற்கான இஸ்லாம் அஹதிய்யா (தஹம்) பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையிக்கு தோற்றிய சகல மாணவர்களும் சித்தியடைந்து 100 வீத சித்தியினை பெற்று சாதனை படைத்துள்ளதாக கற்பிட்டி அல் அக்ஸா அஹதிய்யா பாடசாலையின் அதிபர் எம்.ஐ.சித்தி நிஹாரா தெரிவித்தார்.

மேலும் பரீட்சைக்கு தோற்றிய றியால்தீன் பாத்திமா றிஸ்னா, சுவைர்தீன் பாத்திமா சம்ஹா, நெய்னா மரைக்கார் பாத்திமா சபா, ஹுமாயூன் பாத்திமா நுஹா ஆகிய நான்கு மாணவிகள் நான்கு பாடங்களிலும் அதி திறமை சித்திகளான 04டீ சித்திகளை பெற்றுள்ளதுடன். நிபாஸ் பாத்திமா நதீரா 3டீ 1சீ யையும், அபூதாஹீர் மொஹமட் ஆசீப், பௌசிக் அஹ்னா பாத்திமா நசீர் பாத்திமா அம்னா ஆகிய மூவரும் 2டீ, 2சீ சித்திகளையும், மபாஸ் பாத்திமா ஹமா 2டீ, 1சீ, 1எஸ் சித்தியையும், அப்துல் முனாப் பாத்திமா றிப்ஹத் 3சீ, 1எஸ் சித்திகளையும் பெற்று மொத்தமாக பரீட்சைக்கு தோற்றியவர்கள் 10 பேரும் 100 வீத சித்தி பெற்று சாதனை படைத்துள்ளதாகவும் அதிபர் குறிப்பிட்டார்.

## காட்டு யானை தாக்கி வயோதிபர் பலி

எம்.ரீ.ஆரிப்

இபலோகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட மஹாஇலுப்பல்லம் உதேனிபுர கிராமத்தில் நேற்று முன்தினம்(11) மாலை காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந் துள்ளார்.

சுகாதார அமைச்சின் ஓய்வு பெற்ற சாரதியும் ஒரு பிள்ளையின் தந்தையுமான மஹாஇலுப்பல்லம் உதேனிபுர பகுதியை வசிப்பிடமாக கொண்ட (62) வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் (11) மாலை மஹாஇலுப்பல்லம் நகரில் இருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ள தேக்கு மரங்கள் நிறைந்த சாலை வழியாக அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது யானை தாக்கியுள்ளது.

காட்டு யானை தாக்கியதில் படுகாயமடைந்த நபர் பிரதேச வாசிகளின் உதவியுடன் எப்பாவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மஹாஇலுப்பல்லம் பிரதேசம் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அதற்கு தீர்வாக 10 காட்டு யானைகளை விரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த யானை தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

## வாகன விபத்தில் சார்ஜன்ட் மரணம்

அநுராதபுரம் எம்.ரீ.ஆரிப்

கெக்கிராவ தம்புள்ளை பிரதான வீதியில் மிரிஸ்கோனியாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (11) மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் சார்ஜன்ட் பயணித்த கெப் பயணிகள் போக்குவரத்து பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட் நேற்றுமுன்தினம் மாத்தளை மேல் நீதிமன்றில் வழக்கு ஒன்றிற்காக ஆஜராகி கெக்கிராவ பொலிஸ் நிலையம் திரும்பிச் செல்லும் வழியில் விபத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்தில் கெப் வாகனத்தின் பாரதியும் அதில் பயணித்த சார்ஜன்டும் படுகாயமடைந்துள்ள நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.இதன் போது சிகிச்சை பலனின்றி பொலிஸ் சார்ஜன்ட் உயிரிழந் துள்ளார். பொலிஸ் சார்ஜன்ட் பயணித்த கெப் வாகனத்தின் பாரதியும் ஆபத்தான நிலையில் தம்புள்ளை வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சாய்ந்தமருது பிரதேச கலை இலக்கிய விழா



எம்.எஸ்.எம்.ஸாகிர்

கலாசார அலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையுடன், சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து நடாத்திய பிரதேச கலை இலக்கிய விழா சாய்ந்தமருது பிரதேச பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று(12) வியாழக்கிழமை பெற்றது.

சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முஆபிக்கா தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில், கௌரவ அதிதியாக உதவி பிரதேச செயலாளர் என்.எப். அய்மா மற்றும் விசேட அதிதியாக அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம். றிம்ஸான் மற்றும் அதிதிகளாக நிருவாக உத்தியோகத்தர் எம்.என்.எம்.றம் ஸான், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி.முஹம்மட், சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம் ஸான், கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.எம். தௌபீக், பிரதேச கலாசார அதிகார சபையின் செயலாளர் கே.எம்.ஏ.அஸீஸ், பொருளாளர் அஸ்வான் சக்காப் மௌலானா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எச். சபிக்காவின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளின் உரை, கலை கலாசார நிகழ்வுகள், பிரதேச மட்ட நிகழ்வுகளில் வெற்றி பெற்றோருக்கான கௌரவிப்பு நிகழ்வுகள் எனப் பல நிகழ்வுகளும் இடம் பெற்றன.

பாலர், சிறுவர், கனிஷ்ட, சிரேஷ்ட, அதி சிரேஷ்ட மற்றும் திறந்த பிரிவுகளில் சுமார் 70 பேர் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான கௌரவம் இதன்போது வழங்கப்பட்டது.

இவர்களில் சாய்ந்தமருதில் உள்ள இலக்கியத்தில் ஆர்வமுள்ள மாணவ, மாணவிகள் மற்றும் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பல பிரிவினரும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்றில் வேதாந்திக்கு நினைவேந்தல்





அட்டாளைச்சேனை நிருபர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபக தவிசாளரும், முன்னாள் ஊடகத்துறை பிரதியமைச்சருமான மர்ஹூம் வேதாந்தி எம்.எச்.சேகு இஸ்ஸதீன் ஞாபகார்த்த நினைவு தின நிகழ்வு அண்மையில் அக்கரைப்பற்று கிங்ஸ் கார்டனில் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் அக்கரைப்பற்று செயற்பாட்டாளர் சட்டத்தரணி ராஸி முகம்மட் தலைமையில் வேதாந்திக்கு நினைவேந்தல் எனும் தலைப்பில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சட்டத்தரணிகள், சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இங்கு கலந்து கொண்ட பலரும் வேதாந்தி மர்ஹூம் சேகு இஸ்ஸதீனின் வாழ்வும், பணியும் தொடர்பில் கருத்துரைத்ததுடன் முஸ்லிம்களின் அரசியல் இயக்கமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வளர்த்தெடுப்பதில் காட்டிய அக்கரை மற்றும் முன்னெடுப்புக்கள் குறித்து சட்டத்தரணி சர்ஜூன் ஜமால்தீன், உவைசுர் ரஹ்மான், அரசியல் சமூக செயற்பாட்டாளர் சிறிதரன் திருநாவுக்கரசு, தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளரும், கல்வியலாளருமான சிராஜ் மஸூர் ஆகியோர் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் அரசு பின்னடைவு

## பாரத் அருள்சாமி

(க.கிஷாந்தன்)



மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான பெரும்பான்மையுடன் ஆட்சி பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் பின்னடைவை காட்டுகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதில் அரசாங்கம் பாரிய பின்னடைவு சந்தித்து வருகிறது. இது நாட்டு மக்களை பெருமளவு பாதிக்கும் நிலையில் விசேடமாக மலையக மக்களை பெருமளவு பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது என பாரத் அருள்சாமி ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி பாரத் அருள்சாமி வழங்கி உள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பல அரசாங்கங்கள் ஆட்சி பீடம் ஏறிய பொழுதும் எமது மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளிக்கின்றார்கள். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மலையக மேடைகளில் பல புரட்சிகரமான திட்டங்களை எமது மக்களுக்கு செய்வதாக உறுதியளித்திருந்தார்.

இருப்பினும் எமது அடிப்படை எதிர்பார்ப்பான காணி உரிமை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் அல்லது பொறுப்பான அமைச்சரின் உறுதி வழங்காத நிலையில் அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள செய்தி பலரை ஆச்சரியத்துக்குள்ளாக்கி உள்ளது.

தற்போது நாடெங்கிலும் லயன் மற்றும் தற்காலிக குழு வாழும் 170000 க்கும் அதிகமான குடும்பங்கள் பத்து பேர்ச் அடிப்படையில் தனி வீடுகளைப் பெற்றுக் கொள்ள மொத்த பெருந்தோட்ட பகுதிகளில் 1% குறைவான நிலப்பகுதியே தேவைப்படும். இது தொடர்பான ஆய்வறிக்கைகள் பல சிவில் அமைப்புகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, காணி அமைச்சு என்பவற்றின் பரிந்துரையோடு நான் தயாரித்திருந்த அறிக்கை கடந்த காலங்களில் என்னால் அரசுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும் முன்னாள் பிரதமரின் அசம்பந்தமான போக்கின் காரணமாக இத்திட்டத்துக்கான தீர்வு பின்னடைவானது.


எனவே மலையகப் பகுதிகளில் கண்டி மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்புரிமையையும் மக்களின் பேராதரவையும் பெற்றுள்ளது. எனவே மக்களின் பெரும் எதிர்பார்ப்பும் அவர்களுக்கு சேவை செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பும் அரசாங்கத்திடம் உள்ளது.

மக்களின் அடிப்படை எதிர்பார்ப்பான காணி உரிமை விடயத்தில் அரசாங்கம் உரிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன், எமது காணி உரிமை விடயத்தில் மாற்றுக் கருத்துக்கள் ஏற்படின் மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

# ஜப்பான் அரசின்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும்

## ஜப்பான் தூதுவர் கண்டியில் தெரிவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)



இலங்கையில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்த பல திட்டங்கள் பல்வேறு காரணங்களால் பாதியில் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் பல முக்கிய திட்டங்களை மீள ஆரம்பிக்க ஜப்பான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கண்டியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அது தொடர்பான திட்டங்கள் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்தே மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் அதனால் இலங்கைக்கு பல நன்மைகள் கிடைக்கும் என்வும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் (11) கண்டிக்கு விஜயம் செய்த ஜப்பான் தூதுவர் அகியோ மல்வத்து மகாநாயக்கர் வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரைச் சந்தித்து, ஆசீர்வாதத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு உரையாற்றிய தூதுவர்.

தற்போதைய இலங்கை அரசாங்கத்துடன் ஜப்பான் ஒத்துழைத்து வருவதாகவும் இரண்டும் பௌத்த நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் பாரிய பிணைப்பு இருப்பதாகவும் தெரிவித்தார்.

இராஜதந்திர உறவுகள் பிராந்திய மட்டத்திலும் அதற்கு அப்பாலும் முன்னெடுக்கப்படும் அதேவேளை, பௌத்த மதத்தை மேம்படுத்துவதில் இரு நாடுகளுக்கும் பெரும் பங்கு உண்டு எனவும் அவர் வலியுறுத்தினார்.

# தீர்வு விடயத்தில் ஒரு தரப்பாக பயணிக்க வேண்டும்

## சத்தியலிங்கம் எம்.பி



(கி.வசந்தன்)

அரசியலமைப்பு தீர்வு விடயத்தில் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு தரப்பாக பயணிக்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் எமது கட்சி உறுதியாக இருக்கிறது. அவ்வாறான சந்தர்ப்பம் ஏற்படும் போது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் குரலாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற மற்றும் பிரதிநிதித் துவப்படுத்தாத கட்சிகள் ஒன்றாக இணைந்து தமிழ் மக்களின் நிலைப்பாடு இது தான் என்பதை அரசுடனான பேச்சுவார்த்தையின் போது முன்வைக்க வேண்டும். இது தான் கட்சியின் நிலைப்பாடகவும் இருக்கும்.

இது தொடர்பாக எமது கட்சியின் மத்திய குழுவில் ஆராய்ந்து உரிய முடிவை எடுப்போம் என்றார்.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு பவானந்தராசா எம்.பி. திடீர் விஜயம்





காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களை நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் எஸ். ஸ்ரீ பவானந்தராசா நேற்று (12) பார்வையிட்டுள்ளார்.

வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் மேற்கொண்ட அவர் சுகாதார அதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

மேலதிக விடயங்கள் மற்றும் ஆளணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

வைத்தியசாலையில் ஒரு விடுதியை காய்ச்சலுக்காக மட்டும் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொது மக்கள் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களிற்கமைய செயற்படுமாறும் அவர் தெரிவித்தார்.

# கண்டி மாவட்ட நடைபாதை வியாபாரிகளின் கணக்கெடுப்பை உடன் நடத்தவும்



(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் நடைபாதை வியாபாரிகள் தொடர்பில் உடனடியாக கணக்கெடுப்பு நடத்தி அதனை அடுத்த கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு காணி, விவசாயம், நீர்ப்பாசனம், மற்றும் கால்நடை அமைச்சர் கே. டி லால் காந்த மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்துள்ளார் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நேற்று முன்தினம் (11) கூடிய போது அனுமதியற்ற வீதி வியாபாரிகளை அகற்றுமாறு பொதுமக்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. நடைபாதை வியாபாரிகளுக்கும் பொருளாதாரச் சிக்கல்கள் இருப்பதால், அவற்றை ஒரேயடியாக அகற்ற வேண்டாம் எனவும் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

# நிட்டம்புவவில் பஸ்-வான் நேருக்கு நேர் மோதி விபத்து

## ஐவர் படுகாயம் - இருவர் ஆபத்தான நிலைரயில்



கொழும்பு–கண்டி நெடுஞ்சாலையில் நிட்டம்புவ கலல்பிட்டி பகுதியில் தனியார் பஸ்ஸொன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் படுகாயமடைந்த நிலையில் வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக நிட்டம்புவ போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தள்ளனர்.

கொழும்பில் இருந்து கதுருவெல நோக்கிப் பயணித்த தனியார் பஸ், திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டு மீள கொழும்பு நோக்கி பயணித்த வானுமே விபத்துக்குள்ளாகியுள்ளன. விபத்து இடம்பெற்று உடனடியாக காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஆபத்தான நிலையில் உள்ள இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்படுவர் என வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். விபத்தின் போத வானின் முன்பகுதி சேதமடைந்து சாலையின் குறுக்கே நின்றுள்ளது.

# மழையால் யாழில் 17 பேர் பாதிப்பு

(பு.கஜிந்தன்)

நாட்டில் இரு நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் 5 குடும்பங்களை சேர்ந்த 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என் சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் வேலணை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/14 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அதுபோல சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/165 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரும், ஜே/178 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஆறு பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடுகள் இரண்டும் பகுதியளவில் சேதமடைந்துள்ள.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/144 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த இரண்டு பேரும், ஜே/147 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த ஒருவரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

# அரச அரண்மனை தொல்பொருள் அருங்காட்சியகம்





(எம்.ஏ.அமீனுல்லா)

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை வளாகத்தில் உள்ள கலாசாரப் பாதுகாப்பு மறுசீரமைப்புக்கான அமெரிக்க தூதரக நிதியத்தின் 77 மில்லியன் ரூபாவில் புனரமைக்கப்பட்ட அரச அரண்மனை மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகம் அமெரிக்க தூதுவர் திருமதி ஜூலி சுங் மற்றும் புத்தசாசனம்,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் நேற்று முன்தினம் (11) திறந்து வைக்கப்பட்டது.

தொல்பொருள் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ், 2021 இல் ஆரம்பிக்கப்பட்ட மறுசீரமைப்பு பணிக்கான இத்திட்டம் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டது.

# தந்திரிமலையில் 400 தென்னை மரங்கள் காட்டு யானைகளால் நாசம்



தந்திரிமலை, குடா மல்மடுவ பிரதேசத்தில் தென்னந்தோப்புக்குள் புகுந்த காட்டு யானைக் கூட்டம், சுமார் நானூறு தென்னை மரங்களை வேரோடு பிடிங்கி அழித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வில்பத்துவ வனப்பகுதியில் இருந்து கிராமத்திற்குள் புகுந்த இந்த காட்டு யானைக் கூட்டம், தந்திரிமலை சிறிய மல்மடுவ பகுதியைச் சேர்ந்த திருமதி யமுனா ரோஹினி என்பவருக்குச் சொந்தமான தென்னந் தோட்டத்தையே சேதப்படுத்தியுள்ளது. திருமதி ரோகினி இந்த தேட்டத்தை வங்கியில் கடன் வாங்கி தென்னை பயிர் செய்கையில் ஈடுபட்டதாக தெரிவிக்கின்றார். தந்திரிமலை மற்றும் சுற்றயல் பகுதிகளில் தொடர்ந்து சுற்றித்திரியும் இந்த காட்டு யானைகளை வில்பத்து சரணாலயத்திற்கு விரட்டி, மின் வேலி அமைத்து, தான் உட்பட இப்பகுதி விவசாயிகளுக்கு தேவையான பாதுகாப்பை ஏற்படுத்தி தர வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தென்னந்தோட்டத்தில், தேங்காய் விலை அதிகரித்த சந்தர்ப்பத்தில் வருமானத்தை எதிர்பார்த்திருந்த நிலையில் யானைகளின் அட்டகாசத்தால் அதிர்ச்சியடைந்து ஆதரவற்ற நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# சபரிமலையில் ஐயப்பன் தங்க 'பென்டன்' விற்பனை

சபரிமலை கோயிலில் 12 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தங்கத்திலான ஐயப்பன் பென்டன் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு என்பது திருவாங்கூர் தேவசம்போர்டு சார்பில் முறைப்படி வெளியாக உள்ளது.

கேரளாவில் பிரசித்திப்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஒவ்வொரு மாதமும் நடை திறந்து பூஜைகள் மேற்கொள்ளப்படும். பிறகு கார்த்திகை மாதத்தில் சபரிமலை சீசன் தொடங்கும். கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா உட் பட பல மாநில பக்தர்கள் மாலை அணிந்து விரதம் கடைப்பிடித்து சபரிமலை ஐயப்பனை தரிசனம் செய்வார்கள். பொதுவாக கார்த்திகை மாதத்தில் வரும் மண்டலகால பூஜை அதன்பிறகு வரும் மகரவிளக்கு பூஜை நாளில் ஏராளமான ஐயப்பசாமி பக்தர்கள் கோயிலுக்கு சென்று வருவார்கள். அதன்படி சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டலகால பூஜைகள் நவம்பர் 16ம் திகதி தொடங்கி நடந்து வருகிறது. மண்டலகால பூஜைகள் டிசம்பர் 27ம் திகதி முடிவுக்கு வருகிறது. அதன்பிறகு 2025 ஜனவரி மாதம் 15ம் திகதி மகரவிளக்கு பூஜை நடைபெற உள்ளது.

இந்நிலையில் தான் சபரிமலை ஐயப்பன் பக்தர்களுக்கு திருவாங்கூர் தேவசம் போர்டு சபரிமலை கோயிலில் விரைவில் தங்கத்தினாலான ஐயப்பன் பென்டன் என்பது விற்பனை செய்யப்பட உள்ளது. இதுதொடர்பான புதன்கிழமை திருவாங்கூர் தேவசம் போர்டு சார்பில் ஆலோசனை கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கூட்டத்துக்கு பிறகு தேவசம்போர்டு சார்பில் முறைப்படி அறிவிப்பு வெளியாகி உள்ளது.

முதற்கட்ட தகவலின்படி திருவாங்கூர் தேவசம் போர்டு சார்பில் சபரிமலையில் தங்கத்தினாலான ஐயப்பன் பென்டன் விற்பனை செய்ய ஆர்வமாக இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அதன்படி



ஒரு கிராம், 2 கிராம், 4 கிராம், 6 கிராம், 8 கிராம் என்ற எடையில் தங்கத்தினால் செய்யப்பட்ட சபரிமலை ஐயப்பன் பென்டன்கள் விற்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த பென்டன்களை தயாரித்து வழங்க பல்வேறு நகைக்கடைக்காரர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். டெண்டர் முறையில் பென்டன் உற்பத்தி செய்யும் பணி வழங்கப்பட வாய்ப்புள்ளது.

ஐயப்பன் சாமியின் பென்டன் விற்பனை என்பது தேவசம் போர்டின் வெள்ளி விழா கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக வழங்கப்பட உள்ளது. இந்த பென்டன் ஒரு கிராம் முதல் 8 கிராம் வரை இருக்கும். பென்டன் தயாரித்து வழங்க பல்வேறு நகைக்கடைக்காரர்கள் இடையே கடும் போட்டி உள்ளது. மகர விளக்கு சீசன் முடிவதற்குள் இதனை நடைமுறைக்கு கொண்டு வரும் வகையில் தேவசம்போர்டு திட்டமிட்டுள்ளது. சபரிமலை கோவிலில் தங்கத்தில் செய்யப்பட்ட ஐயப்பன் பென்டன் விற்பனை செய்யப்படுவது இது முதல் முறையல்ல. முன்னதாக 1980களில் சபரிமலையில் பென்டன் விற்பனை தொடங்கியது. கடைசியாக 2011-2012 காலக்கட்டத்தில் அதாவது 12 ஆண்டுகளுக்கு முன்பு பென்டனின் ஒருபுறம் வெள்ளியில் ஐயப்பன், இன்னொரு புறம் தங்க முலாம் பூசிய விநாயகர் படத்துடன் பென்டன் வழங்கப்பட்டது. அப்போது அதன் விலை என்பது 500 இந்திய ரூபாய் என்ற அளவில் நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது. அதன்பிறகு ஐயப்பன் பென்டன் விற்பனை என்பது நிறுத்தப்பட்டது. இப்போது கேரளாவில் குருவாயூர் கோயிலில் சாமி படம் பொறித்த தங்கம் மற்றும் வெள்ளி பென்டன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதனை பின்பற்றி மீண்டும் சபரிமலையில் ஐயப்பன் உருவம் பொறித்த தங்க பென்டன் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.




## ஆழ்துளை கிணற்றில் வீழ்ந்த சிறுவன் உயிரிழப்பு

ராஜஸ்தான் மாநிலம் தௌசாவில் (Dausa) 150 அடி ஆழ்துளை கிணற்றில் சிக்கி 5 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



56 மணி நேர இரண்டு நாட்களுக்கும் மேலான அதிகாரிகளின் தொடர்ச்சியான மீட்பு பணிகளின் பின்னர், கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட ஆர்யன் என்ற சிறுவன் மயங்கிய நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும், அங்கு அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கலிகாட் கிராமத்தில் வயலில் விளையாடிக் கொண்டிருந்த ஆர்யன் 150 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் விழுந்தார். மீட்புப் பணி ஒரு மணி நேரம் கழித்து ஆரம்பித்தது.

ஜேசிபி வாகனங்கள், துளையிடும் இயந்திரங்கள் மற்றும் ஒரு பைலிங் ரிக் ஆகியவை மூலம் சிறுவனை மீட்பதற்காக இணையான சுரங்கப்பாதை தோண்டப்பட்டன. அதேநேரத்தில் குழாய் மூலம் ஆக்ஸிஜன் வழங்கப்பட்டது. எனினும், நீண்ட நேர போராட்டத்தின் பின்னர், மீட்புப் பணியாளர்கள் சிறுவனை சுற்றி கயிறு கட்டி மயக்கமடைந்த நிலையில் ஆழ்துளை கிணற்றிலிருந்து வெளியே எடுத்தனர். பின்னர், மேம்பட்ட உயிர் பாதுகாப்பு அமைப்பு பொருத்தப்பட்ட அம்பியுலன்ஸ் ஆர்யன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும், அங்கு அவர் துரதிர்ஷ்டவசமாக உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது.

## கோவையில் வீதி விபத்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலி



கோவை அருகே வாகனம் மீது கார் மோதிய விபத்தில் 2 மாதக் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கேரள மாநிலம் பத்தினம்திட்டா மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஜேக்கப் ஆபிரகாம், அவரது மனைவி சீபா, மருமகள் எலீனா தாமஸ் மற்றும் பேரன் ஆரான் (2 மாதம்) ஆகியோருடன் நேற்று காலை சேலம்-கொச்சின் தேசிய நெடுஞ்சாலையில் பெங்களூர் நோக்கி சென்று கொண்டிருந்தார். போடிபாளையம் பிரிவு அருகே வந்த போது, கார்; கட்டுப்பாட்டை இழந்துள்ளது. இதனால், நிலைதடுமாறி எதிரே வந்த வாகனம் மீது பயங்கரமாக மோதியுள்ளது. இதில், ஜேக்கப் ஆபிரகாம், அவரது மனைவி சீபாஇ பேரக்குழந்தை ஆரான் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மருமகள் எலினா தாமஸ் பலத்த காயங்களுடன் கோவை மாநகர் சுந்தராபுரம் அபிராமி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராமேஸ்வரத்தில் கரை ஒதுங்கிய இராட்சத திமிங்கலம்

இராமநாதபுரம் பாம்பன் கடற்கரையில் புதன்கிழமை காலை 2 தொன் எடையும் 18 அடி நீளம் கொண்ட இராட்சத திமிங்கலம் ஒன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த திமிங்கலம் நீல திமிங்கல வகையை சேர்ந்தது எனவும் இவ்



வகை திமிங்கலங்கள் 118 அடி நீளம் வரை வளரக்கூடியது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த திமிங்கலத்தின் உடலை பாம்பன் கடற்கரை பகுதியில் புதைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கரை ஒதுங்கிய இந்த இராட்சத திமிங்கலத்தை பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் அங்கு வருகை தருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு திருப்பி அனுப்புங்கள் இளைஞர் கோரிக்கை

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் இலங்கை தமிழர் ஒருவர் தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு போர் காரணமாக 1997 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜாய் (30) என்பவர் தனது 8 ஆவது வயதில் இலங்கையில் இருந்து கடல் வழியாக தனுஷ்கோடிக்கு அகதியாக சென்றுள்ளார். தொடர்ந்து இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்.

ஜாய், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் இருந்து தப்பி தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று அங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களை சந்தித்து, 1997 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு போரின் போது இரவு தூங்கி கொண்டிருந்த என்னை எனது பெற்றோர் படகில் இந்தியாவிற்கு ஏற்றிவிட்டனர். காலையில் கண் விழித்து பார்த்த போதுதான் தனுஷ்கோடி கடற்கரையில் தமிழகத்திற்கு அகதிகளாக வந்த இலங்கை தமிழர்களுடன் இருந்ததை நான் அறிந்தேன். பின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக் கப்பட்டேன். ஆனால் என்னை எனது சொந்த நாடான இலங்கைக்கு திரும்பி அனுப்பி வையுங்கள்" என மனு கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்த லைவர் அலுவலகம் முன்பு தனது உடலில் பெட்ரோல் ஊற்றி தற்கொலைக்கு முயன்றார். அப்போது அவர் மீது நாகர் கோயில் பொலிஸார் வழக்கு பதிவு செய்தனர். அதில் அங்குள்ள நீதிமன்றம் உடனடியாக ஜாயை இலங் கையில் இருக்கும் பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்துள்ளனர். ஆனால் அவர் இப்போது வரை அனுப்பி வைக்கப்படவில்லை. இதனால் தன்னை தனது நாட்டிற்கு மீண்டும் அனுப்பி வைக்க வலியுறுத்தி பலமுறை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரிடம் மனு கொடுத்துள்ளார். ஆனால், இதுவரை ஜாய் இலங்கை திரும்பி செல்ல நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதையடுத்து புதன்கிழமை மீண்டும் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் வந்த ஜாய்; அலுவலகம் அருகே மண்டி போட்டு போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதனால் மாவட்ட ஆட்சியாளர் அலுவ லகத்தில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்ப ட்டது. இது குறித்து தகவலறிந்த கேணி க்கரை பொலிஸார் அவரை க்யூ பிரிவு அலுவலகத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## பிள்ளைகளை கொன்ற தாய்





குடும்பத்தகராறில் பெற்ற தாயே தனது குழந்தைகளை கிணற்றில் தள்ளி கொலை செய்த சம்பவம் சிவகங்கை மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

குடும்பத்தகராறில் பெற்ற தாயே தனது குழந்தைகளை கிணற்றில் தள்ளி கொலை செய்த சம்பவம் சிவகங்கை மாவட்டத்தில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சிவகங்கை மாவட்டம், திருமன்பட்டியை சேர்ந்த சந்திரன் – ரஞ்சிதா தம்பதியர்களுக்கு நான்கு வயதில் கீர்த்தி என்ற பெண் குழந்தையும் மூன்று வயதில் சங்கீதா என்ற பெண் குழந்தையும் உள்ளனர். கணவர் மனைவிக்கிடையே குடும்ப தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தான் பெற்ற இரண்டு குழந்தைகளையும் தாய் ரஞ்சிதா கீழப்பூங்குடி அய்யனார் கோயில் அருகேயுள்ள கிணற்றில் தள்ளிவிட்டு கொலை செய்ததாக கூறப்படுகிறது. இருவரின் உடலை கைப்பற்றிய பொலிஸ ார் உடற்கூற்றுபரிசோதனைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து மதகுபட்டி பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட நிலையில் தாய் ரஞ்சிதா திருமலை என்ற பகுதியில் தலைமறைவாகி இருந்ததை அறிந்த அப்பகுதி பொது மக்கள் தாயைப் பிடித்து காவல் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இச்சம்பவம் குறித்து பொலி ஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். குடும்பத்தகராறில் பெற்ற தாயே தனது குழந்தைகளை கிணற்றில் தள்ளி கொலை செய்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

## டங்ஸ்டன் சுரங்க விவகாரம்; விரைவில் சாதகமான முடிவு

டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதை கைவிட வேண்டும் என மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டியிடம் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை கோரிக்கை மனு அளித்தார். பின்னர் அவர் விரைவில் சாதகமான முடிவு வரும் என உறுதி அளித்தார்.



மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டி மற்றும் நாயக்கர்பட்டி பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதைக் கைவிட வேண்டும் என்று நாம் ஏற்கனவே விடுத்த கோரிக்கை தொடர்பாக மதுரை மாவட்ட சகோதர சகோதரிகள் சார்பில் மத்திய இணையமைச்சர் எல்.முருகன் மற்றும் நானும் நேற்று டில்லியில் மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் கிஷன் ரெட்டியை நேரில் சந்தித்துப் பேசினோம்.

அவர் எங்கள் கோரிக்கைகளையும், தி.மு.க. அரசு வேண்டுமென்றே உண்மைகளை மறைத்து தவறான தகவல்களை கொடுத்து டங்ஸ்டன் சுரங்கத்திற்கான எதிர்ப்புக்கு வழிவகுத்தது குறித்தும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். மேலும் சுரங்கம் அமைக்க ஒப்பந்தம் அறிவிப்பதற்கு முந்தைய மற்றும் பிந்தைய நிகழ்வுகளின் காலவரிசையை எங்களுக்கு விரிவாக விளக்கியதுடன் மக்களின் நலன் சார்ந்த சாதகமான முடிவு விரைவில் எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். பிரதமர் மோடி தமிழக மக்களின் நலன்களை எப்போதும் மனதில் கொண்டவர். எனவே அரிட்டாப்பட்டி நாயக்கர்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த நமது சகோதர சகோதரிகளின் இன்னல்களுக்கு நிச்சயம் சாதகமான தீர்வு கிடைக்கும் என அண்ணாமலை கூறியுள்ளார்.

# காஸா மீது இஸ்ரேல் தாக்குதல்; 33 பேர் உயிரிழப்பு

காஸா முனையில் இஸ்ரேல் தொடர் தாக்குதல் நடத்தி வருகிறது. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த வீட்டில் புதன்கிழமை இரவு இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 33 பேர் உயிரிழந்ததாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இஸ்ரேல் மற்றும் லெபனான் ஹிஸ்புல்லா இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டிய நிலையிலும், இஸ்ரேல் ஹமாஸ் இடையிலான போர் முடிவுக்கு வரவில்லை. தற்போதைய அமெரிக்க அரசு மற்றும் புதிதாக ஆட்சி அமைக்க இருக்கும் அமெரிக்க நிர்வாகங்கள் அடுத்த ஆண்டு ஜனவரியில் புதிய அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்கும் முன் போரை முடிவுக்கு கொண்டுவர நம்பிக்கை தெரிவித்துள்ளன. எனினும், இது தொடர்பான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் முடங்கி வருகின்றன. சமீபத்திய தாக்குதலை மருத்துவமனையின் அருகாமையில் இருந்த ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சூடானில் குண்டுவீச்சு: 127 பேர் பலி



சூடானில் உள்நாட்டு கலவரம் நீடித்து வரும் நிலையில் துணை இராணுவப்படை வீரர்களின் முகாம்கள் மீது குண்டு வீசப்பட்டது. இந்தக் குண்டு வீச்சில் 127 பேர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடான சூடானில் கடந்த 2021 ஆம் ஆண்டு இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இராணுவ தளபதியான ஜெனரல் படக் அல்–பர்ஹன் ஆட்சியை நடத்தி வருகிறார். துணை இராணுவ படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவ தளபதி ஜெனரல் படக் அல்–பர்ஹன் முயற்சி மேற்கொண்டார்.

இதற்கு துணை இராணுவ படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது. இதனால் இராணுவத்திற்கும் துணை இராணுவத்திற்கும் இடையே மோதல் ஏற்பட்டது. 2022 ஆம் ஆண்டு முதல் உள்நாட்டு போராக மாறி கடுமையான சண்டை நடைபெற்று வருகிறது. சுமார் 2 ஆண்டுகளாக நீடித்துவரும் இந்த போரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். அங்குள்ள கிராமங்களை துணை இராணுவ படை வீரர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இராணுவ ஆட்சியினைக் கவிழ்க்க சதிசெய்து வருகின்றனர். இந்த நிலையில் துணை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களை குறிவைத்து இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பொதுமக்கள் உட்பட 127 பேர் உயிரிழந்தனர். இதற்கு துணை இராணுவம் பதிலடி கொடுக்கும் என்பதால் உள்நாட்டு போர் தீவிரம் அடையும் என தெரிவிக்கப்படுகிறது.

# 400 பில். பெறுமதியான சொத்து; எலோன் மஸ்க் முதலிடம்

ப்ளூம்பெர்க் பில்லியனர்கள் குறியீட்டின்படி, ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனரும் டெஸ்லாவின் தலைமை நிர்வாக அதிகாரியுமான எலோன் மஸ்க்கின் (Elon Musk) சொத்து மதிப்பானது 400 பில்லியன் அமெரிக்க டொலர்களை தாண்டியுள்ளது.

இதனால், வரலாற்றில் முதற் தடவையாக 400 பில்லியன் சொத்து மதிப்பினை கடந்த முதல் நபர் ஒன்ற பெருமையை எலோன் மஸ்க் பெற்றுள்ளார்.

SpaceX இன் அண்மைய உள் பங்கு விற்பனையானது அவரின் நிகர சொத்து மதிப்பை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகித்ததாக ப்ளூம்பெர்க் தெரிவித்துள்ளது. இது அவரது செல்வத்தில் தோராயமாக 50 பில்லியன் டொலர்களை சேர்த்ததுடன் SpaceX இன் மொத்த மதிப்பீட்டை சுமார் 350 பில்லியன் டொலர்களாக கொண்டு வந்தது. இந்த மதிப்பீடு உலகின் மிக மதிப்புமிக்க தனியார் நிறுவனமாக SpaceX இன் நிலையை உறுதிப்படுத்துகிறது. தற்சமயம் எலோன் மஸ்க்கின் நிகர சொத்து மதிப்பானது 447 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்துள்ளது.

இது SpaceX பங்கு விற்பனை மற்றும் டெஸ்லாவின் பங்கு விலையில் ஏற்பட்ட ஏற்றத்தால் உந்தப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்பின் வெற்றிக்குப் பின்னர், டெஸ்லாவின் பங்குகள் ஏறக்குறைய 65% உயர்ந்து, எலோன் மஸ்க்கின் நிகர மதிப்பில் பில்லியன்களைச் சேர்த்தன. ஜனவரியில் பதவியேற்கும் ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் சாத்தியமான ஒழுங்குமுறை மாற்றங்களால் டெஸ்லா பயனடைவது குறித்து முதலீட்டாளர்கள் நம்பிக்கைக் காட்டியுள்ளனர்.

சுய–ஓட்டுநர் கார்களுக்கான நெறிப்படுத்தப்பட்ட விதிமுறைகள், வரிக் கொள்கைகளில் சரிசெய்தல் பற்றிய ஊகங்கள் டெஸ்லாவின் பங்கு உயர்வை மேலும் தூண்டியது. எலோன் மஸ்க்கின் SpaceX மற்றும் வுநளடய மட்டும் அல்ல. அவரது செயற்கை நுண்ணறிவு நிறுவனத்தின் (xAI) மதிப்பீடு கடுமையாக உயர்ந்ததும் காரணமாகும்.

நிறுவனம் அதிநவீன யுஐ தொழில்நுட்பங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் உலகளவில் முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. எலோன் மஸ்க்கின் நிதி சாதனைகள் அசாதாரணமானவை என்றாலும், அவர் கடந்து வந்த பாதையில் பல சவால்களையும் எதிர்கொண்டதால் அது இன்று உலகளாவிய பில்லியனர் தரவரிசையில் அவரது ஆதிக்கத்தை வலுப்படுத்தியது.



## தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

# ஆப்கானிஸ்தான் அமைச்சர் பலி

தலைநகர் காபூலில் புதன்கிழமை (11) நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அகதிகளுக்கான ஆப்கானிஸ்தானின் அமைச்சர் கலீல் ஹக்கானி (Khalil Haqqani) கொல்லப்பட்டதாக அந்நாட்டின் தலிபான் ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஹக்கானி தனது அலுவலகத்தை விட்டு வெளியேறும் போது, நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் மேலும் 6 பேர் உயிரிழந்ததாக உள்துறை அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. இவர், ஹக்கானி நெட்வொர்க் என்று அழைக்கப்படும் தலிபானின் சக்திவாய்ந்த பிரிவின் முக்கிய உறுப்பினராக இருந்தார். மேலும் அவர் அமெரிக்காவால் உலகளாவிய பயங்கரவாதியாக அடையாளம் காணப்பட்டார். இந்த தாக்குதலுக்கு, இஸ்லாமிய அரசு (ஐ.எஸ்) அமைப்பு பொறுப்பேற்றது. அதேநேரம், ஹக்கானி ஐஎஸ் அமைப்பின் தாக்குதலால் கொல்லப்பட்டதை தலிபான் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.




கலீல் ஹக்கானியின் சகோதரர் ஜலாலுதீன் 1980 களில் ஆப்கானிஸ்தானில் சோவியத் படையினருடன் போரிட்ட புகழ்பெற்ற கொரில்லா தலைவர் ஆவார். மேலும் தலிபான்களின் 20 ஆண்டுகால கிளர்ச்சியின் போது பல தாக்குதல்களுக்குப் பின்னால் ஹக்கானி வலையமைப்பை நிறுவினார்.

2021 ஆம் ஆண்டில் வெளிநாட்டு படைகள் முழுவதுமாக திரும்பப் பெறப்பட்டதன் மூலம் தலிபான்கள் முழுமையான கட்டுப்பாட்டைப் பெற்றதிலிருந்து ஆப்கானிஸ்தானில் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமை மேம்பட்டுள்ளது. எனினும், ஒவ்வொரு ஆண்டும் நாட்டில் பல குண்டுவெடிப்புகள் மற்றும் தற்கொலைத் தாக்குதல்கள் அரங்கேறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் திட்டம்; அமெரிக்கா எச்சரிக்கை

உக்ரைன் – ரஷ்யா இடையே நடைபெற்று வரும் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. நெடுந்தூரம் சென்று தாக்கும் வல்லமை கொண்ட ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு அமெரிக்கா ஒப்புதல் கொடுத்தது. இந்த நிலையில் உளவுத்துறை மதிப்பீட்டின்படி மீண்டும் உக்ரைன் மீது ரஷியா பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளது என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதனைத் தொடர்ந்த உக்ரைன் ரஷ்யா மீது தாக்குதல் நடத்தியது. அதேவேளையில் ரஷ்யா உக்ரைன் மீது கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும்



பாலிஸ்டிக் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் குற்றம்சாட்டியது. ஆனால், நாங்கள் ஒரேஷ்னிக் என்ற புதிய ஏவுகணையை சோதனை செய்தோம். இந்த ஏவுகணை உக்ரைன் பகுதியை தாக்கியதன் மூலம் சோதனை வெற்றி பெற்றது என புடின் அறிவித்தார். இந்த நிலையில் உளவுத்துறை மதிப்பீட்டின்படி மீண்டும் உக்ரைன் மீது ரஷ்யா பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளது என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதற்கிடையே உக்ரைன் போரில் கேம் சேஞ்சராக ஒரேஷ்னிக் இருப்பதைவிட, அமெரிக்காவை மிரட்டும் முயற்சியாகவே இது பார்க்கப்படுவதாக அமெரிக்க அதிகாரிகள் பார்க்கிறார்கள். இந்நிலையில் டிரம்ப், இரு நாடுகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகின் மிகப்பெரிய பவளப்பாறை கண்டுபிடிப்பு




பூமியில் மிகப்பெரிய விலங்கை விட பெரிய பவளப்பாறை சமீபத்தில் பசிபிக் பெருங்கடலில் கண்டுபிடிக்கப்பட்டது. நஷனல் ஜியோகிராஃபிக் வீடியோகிராபர் மனு சான் பெலிக்ஸ் மற்றும் அவரது மகன் இனிகோ சான் பெலிக்ஸ் ஆகியோர் இந்த அற்புதமான அதிசயத்தை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தனர். தென்மேற்கு பசுபிக் பெருங்கடலில் உள்ள சாலமன் தீவுகள் அருகே புகைப்படம் எடுக்கச் சென்றபோது, 300 ஆண்டுகள் பழமையான இந்த அதிசய பவளப்பாறையை கண்டுபிடித்தனர். உலகிலேயே இதுவரை பதிவு செய்யப்பட்ட மிகப்பெரிய பவளப்பாறை இது என்று ஒரு அறிக்கை தெரிவித்துள்ளது. 300 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான இந்த பவளப்பாறை 104 அடி நீளமும், 111 அடி அகலமும், 18 அடி உயரமும், 183 மீட்டர் சுற்றளவும் கொண்டது.



பருவநிலை மாற்றம் பசுபிக் கடலை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆய்வு செய்வதற்கான பயணத்தின்போது புகைப்படக் கலைஞர் மனு சான் பெலிக்ஸ் என்பவரால் தற்செயலாக இந்த மிகப்பெரிய பவளப்பாறை கண்டுபிடிக்கப்பட்டது. பவளப்பாறை என்பது நூறாயிரக்கணக்கான சிறிய உயிரினங்களின் வாழ்விடமாகும். சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பவளப்பாறை நீல திமிங்கலத்தை விட பெரியது என்று குழு உறுப்பினர்கள் கூறுகின்றனர். நஷனல் ஜியோகிராபிக் குழுவின் பயணம் ஆனது பருவநிலை மாற்றம் பசிபிக் பகுதியை எவ்வாறு பாதிக்கிறது என்பதைக் கண்டறிவதாகும். இந்த பயணத்தின் போது, வரைபடத்தில் கப்பல் விபத்தை பார்த்ததும் தான் டைவ் செய்ததாகவும், அப்போது தான் இந்த பவளப்பாறையை கவனித்ததாகவும் புகைப்படக்காரர் தெரிவித்துள்ளார்.

# இறுதிவரை போராடுவேன்; தென்கொரிய ஜனாதிபதி சபதம்



தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக் யோல் இறுதிவரை போராடுவேன் என நேற்று (12) சபதம் மேற்கொண்டார். இராணுவச் சட்டத்தை சுமத்துவதற்கான தோல்வியுற்ற முயற்சியில் பதவி விலகுவதற்கான அழைப்புக்களை எதிர்கொண்ட அவர், தனது நடவடிக்கைகள் சட்டப்பூர்வமானது மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது. இராணுவ சட்டம் குறித்து கவலையை ஏற்படுத்தியமைக்காக பொது மக்களிடம் மன்னிப்புக் கோரிய யூன், நாட்டின் அரசாங்கத்தை முடக்குவதற்கும், கொரியா குடியரசின் எதிர்காலத்தை அச்சுறுத்துவதைத் தடுக்க நான் இறுதிவரை போராடுவேன் என ஒரு நீண்ட தொலைக்காட்சி உரையில் அறிவித்தார்.

தாராளவாத ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி அதிகாரத்தை யூன் மீறியதாகக் குற்றம் சாட்டி, அவருக்கு எதிராக ஒரு புதிய பதவி நீக்கத் தீர்மானத்தை சமர்ப்பிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னதாக இந்த தொலைக்காட்சி உரையாடல் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “லங்கா T10 சுப்பர் லீக்” கில் ஆட்ட நிர்ணயம்; இந்தியரை கைது செய்ய விசேட பொலிஸ் குழு

கண்டி பல்லேகலே மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான “லங்கா டி10 சுப்பர் லீக்“ கிரிக்கெட் போட்டியில் ஆட்ட நிர்ணய மோசடியில் ஈடுபடுமாறு மேற்கிந்திய தீவுகள் வீரரிடம் பேரம் பேசிய குற்றச்சாட்டின் பேரில் இந்திய பிரஜை ஒருவரை கைது செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இது தொடர்பில் விளையாட்டு குற்றங்களை தடுக்கும் விசேட பொலிஸ் பிரிவு அதிகாரிகள் குழு நேற்று முன்தினம் கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு சென்று விசாரனைகளை ஆரம்பித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) ஆட்ட நிர்ணயம் செய்ததாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக விளையாட்டு குற்றங்களை தடுக்கும் சிறப்பு பொலிஸ் பிரிவுக்கு முறைப்பாடு செய்துள்ளதாக தெரியவருகிறது.

குற்றம் சாட்டப்பட்ட இந்திய பிரஜை இந்தப் போட்டியில் பங்கேற்கும் அணியின் உரிமையாளர் என்பதோடு,ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுமாறு சம்பந்தப்பட்ட வீரரிடம் அவரே கூறியதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டிக்கு சென்றுள்ள பொலிஸ் குழுவுடன் விளையாட்டு குற்றங்களை தடுக்கும் விசேட பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரிகளும் அடங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கேற்கும் ஆறு அணிகளில் சுமார் 30 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

LANKA T10 SUPER LEAGUE

# இலங்கை – நியூசிலாந்து தொடர்

இலங்கை கிரிக்கெட் அணியின் நியூசிலாந்து சுற்றுப் பயணத்திற்கான போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று T20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ளது.

### T 20 போட்டி

..................................

முதல் போட்டி – டிசம்பர் 28
இரண்டாவது போட்டி – டிசம்பர் 30
மூன்றாவது போட்டி – ஜனவரி 02

### ஒருநாள் போட்டி

......................................

முதல் போட்டி – ஜனவரி 05
இரண்டாவது போட்டி –ஜனவரி 08
மூன்றாவது போட்டி – ஜனவரி 11

NEW ZEALAND CRICKET

Sri Lanka Cricket




# 2034 FIFA உலகக் கிண்ணம் சவுதியில்...
## கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவிப்பு

2034ஆம் ஆண்டு பிபா உலகக் கிண்ண போட்டித் தொடரை சவுதி அரேபியாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் (11) கூடிய உலக கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாக சபை இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2030 FIFA உலகக் கிண்ணம் ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் மொராக்கோ இணைந்து நடத்தவுள்ளது.

பிபா உலகக் கிண்ணத்தின் 100ஆவது ஆண்டு விழாவையொட்டி, 2030ல் அர்ஜென்டினா, பராகுவே, உருகுவே ஆகிய நாடுகளில் 3 போட்டிகளை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்ட கராத்தே போட்டியில் ஐந்து வீரர்களுக்கு சாம்பின் பட்டம்





**வாஸ் கூஞ்ஞ**

மன்னார் மாவட்ட கராத்தே போட்டி கிளிநொச்சி மாவட்ட உள்ளரங்கு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் ஐந்து மாணவர்கள் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஐ.எஸ்.எஸ்.கே.ஏ கழகத்தின் சார்பாக பங்குபற்றிய மாணவர்களே சாம்பியனாகினர்.

வெற்றியீட்டியவர்கள்ஏ. இவோன் ஸ்ரேயா (விடத்தல்தீவு தூய. யோசவாஸ் மகா வித்தியாலயம்) . ஜே.ஜெசின் (கற்கடந்தகுளம் சென் யோசவ் விளையாட்டு கழகம்) . என்.நிதுன்னா (கற்கடந்தகுளம் சென் யோசவ் விளையாட்டு கழகம்) பி.ரஜீவன் (வங்காலை சென்.ஆன்ஸ் பாடசாலை) எஸ்.முகேஸ் (மன்னார் சித்திவிநாயகர் இந்து கல்லூரி).

வெற்றிப் பெற்றவர்களின் பயிற்றுவிப்பாளராக சென்சை அ.அமல்ராஜ் ஐ.எஸ்.எஸ்.கே கழகத்தின் மன்னார் மாவட்ட தலைமை ஆசிரியர் ஆவார்.

இப்போட்டியில் மன்னார் மாவட்டத்திலிருந்து இரண்டு கழகங்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச டெஸ்ட் தரப்படுத்தலில் ஹெறி புரூக் முதலிடத்தில்




சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் துடுப்பாட்ட தரவரிசையில் இங்கிலாந்து வீரர் ஹெறி புஷரூக் முதலிடத்தை பிடித்துள்ளார்.

இங்கிலாந்து அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வெளிக்காட்டிய திறமைகளை அடிப்படையாகக் கொண்டே தரவரி நடத்தப்பட்டுள்ளது.

ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் தரப்படுத்தலில் முன்னணியில் இருந்த இங்கிலாந்தின் ஜோ ரூட் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

தரவரிசையில் நியூசிலாந்து அணியின் கேன் வில்லியம்சன் மூன்றாவது இடத்தில் இருக்கிறார்.

ஐசிசியின் சமீபத்திய டெஸ்ட் துடுப்பாட்ட தரப்படுத்தலில் இலங்கையின் கமிந்து மெண்டிஸ் 6ஆவது இடத்தில் இருந்து 5ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

# லங்கா T10 முதல் வெற்றி மூன்று போட்டிகள் ஜப்னா - கோல்

லங்கா T10 லீக் தொடர் நேற்று முன்தினம் (11) கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் மூன்று போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டி ஹம்பாந்தோட்டை பெங்ளா டைகர்ஸ் மற்றும் ஜப்னா டைடன்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்றன. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாடிய பெங்ளா டைகர்ஸ் அணியானது தசுன் ஷ ானக்கவின் அதிரடி அரைச்சதத்தோடு 10 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 106 ஓட்டங்கள் எடுத்தது.

ஷானக்க 5 சிக்ஸர்கள் மற்றும் 4 பௌண்டரிகள் அடங்கலாக வெறும் 17 பந்துகளில் 51 ஓட்டங்களை எடுத்திருந்தார். ட்ரெவின் மெதிவ் ஜப்னா டைடன்ஸ் அணிக்காக 10 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜப்னா டைடன்ஸ் குறித்த இலக்கினை 8.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிப் பெற்றத. ஜப்னா டைடன்ஸ் அணியில் டொம் கோஹ்லர்–கட்மோர் அதிரடி அரைச்சதம் விளாசி வெற்றியை உறுதி செய்தனர். அவர் 21 பந்துகளில் 4 சிக்ஸ ர்கள் மற்றும் 6 பௌண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டார்.

**போட்டி விபரம்**

**பெங்ளா டைகர்ஸ் – 106/8 (10)**
**தசுன் ஷானக்க 51(17), ட்ரவீன் மெதிவ் 10/4**
**ஜப்னா டைடன்ஸ் – 107/2 (8.1)**
**டொம்–கொஹ்லேர் கட்மோர் 57(21)**
**நுவரெலியா கிங்ஸ் – கொழும்பு ஜக்குவர்ஸ்**

இரண்டாவது போட்டியில் நுவரெலியா கிங்ஸ் –



கொழும்பு ஜக்குவர்ஸ் இடையிலான மோதல் மழையின் காரணமாக முடிவுகள் இன்றி கைவிடப்பட்டது.

**போட்டி விபரம்**

**நுவரெலியா கிங்ஸ் – 79/1 (6)**
**அவிஷ்க பெர்னாண்டோ 50(18)**
**கண்டி போல்ட்ஸ் – கோல் மார்வல்ஸ்**

மகீஷ் தீக்ஸன தலைமையிலான கோல் மார்வல்ஸ் இப்போட்டியில் கண்டி போல்ட்ஸ் அணியை வீழ்த்தி வெற்றிப் பெற்றது. கண்டி அணியின் துடுப்பாட்டத்தில் தினேஷ் சந்திமால் 25 பந்துகளில் 5 சிக்ஸர்கள் மற்றும் 7 பௌண்டரிகள் அடங்கலாக 66 ஓட்டங்கள் பெற்று பிரகாசித்த போதும் அது பயனளிக்கவில்லை.

கோல் மார்வல்ஸ் அணியின் வெற்றியை வேகப்பந்து வீச்சாளரான பினுர பெர்னாண்டோ 09 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றி உறுதி செய்தார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள “அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்” நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 13ம் திகதி வெள்ளிக்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.